# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்13 வள்ளுவர் ஆண்டு2029 ஆவணி 10 புதன்கிழமை (26-08-1998) UTHAYAN – A Lively National Tamil Daily கதிர்: 232


# கொழும்பில் நடுச் சந்தியில் ராணுவக் கப்டன் மீது சூடு!

## பிஸ்டல் குழு தப்பியது நேற்று மாலை சம்பவம்

கொழும்பு, ஓகஸ்ட் 26

வன்னி யுத்த முனையில் ஆட்லறிப் பிரிவில் கடமையாற்றும் இராணுவக் கப்டன் ஒருவர் கொழும்பு, பம்பலப்பிட்டி டிக்ஸ்மன் வீதிச் சந்தியில் நேற்று மாலை — பகல் வேளையில் — போக்குவரத்து நெருக்கடிக்கு மத்தியில் இனந் தெரியாத இருவரால் சுடப்பட்டார்.

ஆபத்தான நிலையில் கொழும்பு தேசிய ஆஸ்பத்திரியில் அவர் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

டிக்ஸ்மன் வீதிச் சந்தியில் போக்குவரத்துச் சமிக்ஞை விளக்கை அவதானித்து — அவரது வாகனம் நிறுத்தப்பட்டபோது சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் அவரை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்ததாகக் கூறப்படுகின்றது. துப்பாக்கிப் பிரயோகம் செய்தவர்கள் பின்னர் தப்பிச்சென்ற

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தாக்குதல்

யாழ்ப்பாணம் காக்கைதீவுப் பிராந்தியத்தில் கடற்றொழிலுக்குச் சென்ற சுமார் 15 மீனவர்கள் நேற்றுக் காலை சீருடையினரால் நையப்புடைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தாக்குதலுக்கு உள்ளான மீனவர்களுள் ஒருவரான ஆனைக்கோட்டை சாவற்காட்டைச் சேர்ந்த அப்துல் காதர் அனீஸ் (வயது 19)

(10 ஆம் பக்கத் தொடர்)

## வடக்குக்கு கப்பலில் பொருள்களை அனுப்பும் வர்த்தகருக்கு இலகுகடன்

### ஜனாதிபதி உறுதி அளித்துள்ளாராம்

கொழும்பிலிருந்து கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்கு பொருள்களை அனுப்பும் வர்த்தகர்களுக்கு இலகு கடன் வழங்க ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உறுதியளித்துள்ளார் என நாடாளுமன்ற உறுப்பினரும், ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

'பிரின்ஸஸ் காஷ்' கப்பலில் பொருள்களை அனுப்பி நஷ்டமடைந்துள்ள வர்த்தகர்களுக்கு பொருள்களை ஏற்பாடு செய்து கொடுத்த சுமார் 50 வியாபாரிகள் நேற்று டக்ளஸ் தேவானந்தாவைக் கொழும்பில் சந்தித்து உரையாடினார்கள். அப்பொழுதே டக்ளஸ் தேவானந்தா இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

கப்பல் தகர்ப்பில் பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கு ஏற்பட்ட நஷ்டத்தை சரியான முறையில் மதிப்பிட்டு நஷ்டஈடு வழங்கத் தான் நடவடிக்கை எடுப்பதாக ஈ.பி.டி.பி. தூதுக்குழுவிடம் ஜனாதிபதி நேற்று முன்தினம் உறுதியளித்தது தெரிந்ததே.

இந்த உறுதி மொழியைப் பெற்றுத்தந்ததற்காக அந்த வியாபாரிகள் டக்ளஸுக்கு நன்றி தெரிவித்தனர்.

## காயமுற்ற மேஜர் ஒருவர் ராணுவம் மீது வழக்கு

### அடிப்படை உரிமை மீறல் மனு

கொழும்பு, ஓக. 26

இராணுவம் தனக்குவழங்கி வந்த வசதிகளைமீளப்பெற்று அநீதி இழைக்கின்றது என்று குற்றஞ்சாட்டி காயமடைந்த முன்னாள் இராணுவ மேஜர் ஒருவர் கொழும்பு உயர் நீதிமன்றில் அடிப்படை மனித உரிமை மீறல் மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளார்.

பூநகரி முகாம் மீதான விடுதலைப்புலிகளின் தாக்குதலில் படுகாயமடைந்த மேஜர் மல்லிகார கமகே சந்திரசேகர என்பவரே இவ்வாறு மனுத் தாக்கல் செய்துள்ளார்.

சிகிச்சைக்காக தமக்கு வழங்கப்பட்டிருந்த வாக

(10 ஆம் பக்கம் பார்க்க)

## செம்மணியில் புதைகுழி இல்லை என கூற சோமரத்னவுக்கு வற்புறுத்தல்

### கடிதத்தில் ஒப்பமிடும்படி நெருக்கினராம்

செம்மணிப் பகுதியில் நானூறுக்கு மேற்பட்டோர் புதைக்கப்பட்டுள்ளனர் என்று சொன்னது பொய்; மரணதண்டனை வழங்கப்பட்டதனால் மன நிலை பாதிக்கப்பட்ட நிலையில் அவ்வாறு தெரிவித்தேன் என்று எழுதப்பட்ட கடிதத்தில் கையெழுத்திடுமாறு என்னை வற்புறுத்தினார்கள்.'' — இவ்வாறு வெலிக்கடைச் சிறையில் வைத்து தாக்கப்பட்ட— கிருஷாந்தி வழக்கின் முதலாவது குற்றவாளியான சோமரட்ன ராஜபக்ஷ தம்மைச் சிறை மருத்துவமனையில் சந்தித்துரையாடிய மனித உரிமை ஆணைக்குழு உறுப்பினர்களிடம் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மாலை மனித உரிமை ஆணைக்குழுப் பிரதிநிதிகளான சுந்தரலிங்கம் மற்றும் பேராசிரியர் அலுவிகாரை ஆகியோர் அவரை சிறை ஆஸ்பத்திரியில் சென்று சந்தித்தனர்.

அப்போது சோமரட்ண அவர்களிடம் தெரிவித்ததாவது:

ஓர் அதிகாரியும் மூன்று அல்லது நான்கு சிறைக் காவலர்களுமாக வந்து மேற்படி கடிதத்தைத் தந்து அதில் கையெழுத்திடுமாறு என்னை

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமைகள் குழு பிரதிநிதிகள் யாழ். வருவர்?

கொழும்பு, ஓக. 26

செம்மணியில் உள்ளதாகக் கூறப்படும் மனிதப் புதைகுழிகளைத் தோண்டுவதற்கான ஆரம்பப் பணிகளைக் கவனிக்கவென மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் சிலர் செப்டெம்பர் முதலாம் அல்லதுஇரண்டாம் வாரத்தில் யாழ்ப்பாணம் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்கிடையில் —

செம்மணிப் புதைகுழி குறித்து தகவல் வெளியிட்ட சோமரத்ன ராஜபக்ஷ சிறையில் தாக்கப்பட்டது குறித்து சர்வதேச மன்னிப்புச் சபை அதிர்ச்சியடைந்துள்ளதாக

(10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மருத்துவ பீடத்துக்கு மேலும் 21 மாணவர்

### ஜனாதிபதி பணிப்புரை

கொழும்பு, ஓக. 26

ஜனாதிபதியால் ஏற்கனவே பணிப்புரை வழங்கப்பட்ட போதிலும் யாழ். பல்கலைக் கழக நிர்வாகத்தடை காரணமாக யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்துக்கு அனுமதிக்கப்படாத 21 மாணவர்களையும் உடன் அனுமதிக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மல்லாவியில் நேற்று முழுக் கடையடைப்பு

வவுனியா, ஓக. 26

நிவாரணவெட்டைக் கண்டித்து நேற்று மல்லாவியில் கடையடைப்பு மற்றும் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டன.

நேற்றுக் காலை 6 மணி முதல் பிற்பகல் இரண்டு மணி வரை மக்கள் கடைகள் அனைத்தையும் பூட்டி தமது எதிர்ப்பை தெரிவித்தனர்.

மல்லாவியிலுள்ள செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் அலுவலகத்தின் முன்னால் சுமார் 200 பேர் வரையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அரசு அறிவித்த நிவாரண வெட்டை உடனடியாகநிறுத்தக்கோரும் வாசகங்கள் பொறித்த சுலோக அட்டைகளையும் இவர்கள் ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நிவாரண வெட்டுத் தொடர்பாக ஜனாதிபதியுடன் கதைப்பதாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகள் உறுதியளித்த பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

## இலியாஸ் எம். பிக்கு கொலைப் பயமுறுத்தல்!

### டக்ளஸ் விடுத்தாராம்!!

கொழும்பு, ஓக. 26

ஈ. பி. டி. பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தாவினால் தமக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர் எம். இலியாஸ் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அநுருத்த ரத்வத்தைக்கு முறைப்பாடு செய்துள்ளார் என்று தனியார் தொலைக்காட்சி ஒன்று நேற்று அறிவித்தது.

தமக்கு போதிய நிதி வழங்கப்படவில்லை என்று தாம் வெளிநடப்புச் செய்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது அங்கு வந்த டக்ளஸ் தேவானந்த தம்மை பார்த்து திட்டியதுடன் தமக்கு கொலை அச்சுறுத்தலையும் விடுத்தார் எனவும்

இதனால் தமக்கு போதிய இராணுவப் பாதுகாப்பு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அபிவிருத்திக்குழு கூட்டம்: டக்ளஸ் விளக்க அறிக்கை

கொழும்பு, ஓக. 26

நாடாளுமன்ற உறுப்பினர் இலியாஸ் சமர்ப்பித்த அபிவிருத்தித் திட்டங்கள் மக்களின் நலனுக்கு முன்னுரிமை அளிப்பதாக காணப்படாததனாலேயே சபை அதனை நிராகரித்தது.

இவ்வாறு ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகம்டக்ளஸ் தேவானந்தாநேற்று விடுத்த செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் இலியாஸ் வெளியிட்ட கருத்துக்கள் உண்மைக்குப் புறம்பானவை. யாழ். மாவட்ட அபிவிருத்திக்குழு யாழ்ப்பாணத்திலிருந்து இடம் பெயர்ந்து புத்தளத்தில் அகதிமுகாம்களில் வாழும் முஸ்லிம் மக்களுக்காக 20 லட்சம் ரூபாவினை ஒதுக்கியுள்ளது. அம்மக்களின் முன்னுரிமை தேவையின் அடிப்படையிலேயேகுழுவால் அந்த நிதி ஒதுக்கப்பட்டது. ஆனால் இலியாஸின் திட்

(10 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் பழைய இடத்தில் அளவெட்டி அஞ்சலகம்!

யாழ்ப்பாணம், ஒக. 26

அளவெட்டி அஞ்சலகம் மீண்டும் பழைய இடத்தில் இயங்கவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

அஞ்சல கக்கட்டடம் புனரமைப்புச் செய்யப்பட்டு வருவதுடன் பற்றை மண்டிக் கிடக்கும் அஞ்சலக வளவும் துப்புரவு செய்யப்பட்டு வருகிறது.

இராணுவ நடவடிக்கை காரணமாக பல இடங்களிலும் இயங்கி வந்த இந்த அஞ்சலகம் தற்போது சொந்தக் கட்டடத்தில் மீண்டும் இயங்கவுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை அளவெட்டி-மல்லாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிளைவிற்பனை நிலையம் ஒன்று அளவெட்டி அஞ்சல் அலுவலகத்திற்கு அண்மையில் மீண்டும் திறந்து வைக்கப்படவுள்ளது.

கடந்த கால வன்செயல்களையடுத்து மூடப்பட்டிருந்த இக்கிளை விற்பனை நிலையம் இப்பகுதியில் மக்கள் மீளக்குடியேறியதையடுத்து மீண்டும் திறக்கப்படவுள்ளதாகச் சங்க பொது முகாமையாளர் மு. வாமதேவன் தெரிவித்தார்.

(உ-5)

# விஞ்ஞான ஆங்கில வகுப்புகள்

யாழ்ப்பாணம், ஒக. 26

'சீடா' செயற் திட்டப் பாடசாலைகளில் விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களிலும் விசேட வகுப்புக்கள் எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற வேண்டுமென யாழ் வலயம்1 வலயம்2ஆகியவற்றின் பணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(உ-6)

# இசை நாடகங்கள்

யாழ்ப்பாணம், ஒக. 26

யாழ். மத்திய கல்லூரியின் ஆரம்பக் கல்வி அபிவிருத்தி நிதிக்காக நடிகமணி வைரமுத்துவின் வசந்தகால நாடகக் கலா மன்றம் நடத்தும் இரு இசை நாடகங்கள் எதிர்வரும் 11ஆம், 12ஆம், 13ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரி தம்பர் மண்டபத்தில் நடைபெற உள்ளன.

அரிச்சந்திர மயான காண்டம், பூதத்தம்பி ஆகிய இரு இசை நாடகங்களும் முற்றிலும் பெண் நடிகைகளைக் கொண்டது. காலை, மாலை என ஐந்து காட்சிகளாக நடைபெற உள்ள இந்த நாடகங்கள் எதிர்வரும் 28, 29, 30 ஆம் திகதிகளின் நடைபெற முன்னர் ஏற்பாடாகி இருந்தது.

(உ-9)

## ஹிக்கடுவவில் உள்ள

# தொலைபேசி கோபுரம் தகர்ப்பதற்கு முயற்சி?

கொழும்பு, ஒக. 26

ஹிக்கடுவ தொலைத் தொடர்புக் கோபுரத்தைத் தகர்க்கும் நோக்கத்தோடு வந்தவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் ஒரு தமிழர் உட்பட ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

கம்பி வெட்டும் குறடுகள் சில வயர்த் துண்டுகள் என்பன சகிதம் நேற்று முன்தினம் இரவு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த சமயம் இவர்கள் கைது செய்யப்பட்டதாக ஹிக்கடுவப் பொலீஸார் தெரிவித்தனர்.

(உ-6)


COMMERCIAL BANK

## கொமர்ஷல் வங்கி

கொமர்ஷல் வங்கி
நிலையான வைப்புகளின் மீது
மேலும் அதிக வட்டியை வழங்குகிறது.

புதிய வட்டி வீதங்கள் இதோ!

| | | |
|---|---|---|
| 3 மாத வைப்புக்கள் | — | 10% |
| 6 மாத வைப்புக்கள் | — | 11% |
| 12 மாத வைப்புக்கள் | | |
| மாதாந்தம் | — | 11.375% |
| வருடாந்தம் | — | 12% |
| அழைப்பு வைப்புககள் | — | 10% |

உங்கள் ஆதாயமே எங்கள் நோக்கம்

(சி/4662)


ஓம் விராட்விஸ்வ பிரமனே நமஹ

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வி

## சிவன்ஆச்சாரி கார்த்திகா

மலர்வு: 8 – 9 – 1991

உதிர்வு: 26 – 8 – 1997

காலஞ்சென்ற முருகன் ஆச்சாரியின் பேர்த்தியும், சிவன் ஆச்சாரியின் மகளுமாகிய கார்த்திகாவின் முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி தொண்டமானாறு செல்வச்சந்நிதியில் நடைபெறும்.

முதலாம் ஆண்டில் அன்னாரை நினைவு கூருகின்றோம்.

அப்பா, அம்மா, ஆச்சி, சகோதரர்கள்,
சித்தப்பாமார்கள், சித்திமார்கள்,
மாமாமார்கள், அத்தைமார்கள்.

ஓம் சக்தி நகைத் தொழிலகம்
93, டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

(58661)


## ராஜா டாக்கீஸ்

யாழ்ப்பாணம்.

இன்று



ரஜனி, மீனா
சரத்பாபு செந்தில்
நடித்த

## முத்து

10 30 – 2 00 – 5-00
(புதிய நேரம்)

(சி/4652)

## நாகங்ஸ்

சினிமா
சுன்னாகம்

கார்த்திக் – கௌசல்யா
கவுண்டமணி- செந்தில்
நடித்த

பொன்னுமணி

இனிய பாடல்கள்
நிறைந்த படம்

திரைப்படக் கட்டுத்தாபன (ரீல்ஸ்) படம்.

காட்சிகள்:- 10-30, 2-30

(58659)

## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி.

இன்று
காலை 8-30 மணிக்கு
தசாவதாரம்
அச்சுவேலி
மகாவித்தியாலய
நிதிக்கான விசேட காட்சி

பிற்பகல் 2-00 மணிக்கு
சரத்குமார் - சிம்ரான்
நடித்த
நட்புக்காக

27 ஆம் திகதி மட்டும்
உன்னிடத்தில்
என்னைக் கொடுத்தேன்

28 ஆம் திகதி முதல்
சிவாஜி நடித்த
எங்க ஊர் ராஜா

Tele. No. 070-212223

(58486)


# மரண அறிவித்தல்

## சுவாம்பிள்ளை பற்றிக்

(இரத்தினம்)

சில்லாலையைப் பிறப்பிடமாகவும், கொய்யாத் தோட்டத்தை வதிவிடமாகவும் கொண்ட சுவாம்பிள்ளை பற்றிக் 25-08-98 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சுவாம்பிள்ளை நேசமுத்துவின் சிரேஷ்ட மகனும், காலஞ்சென்ற சின்னப்பு மாகிறேற் ஆகியோரின் மருமகனும், லில்லி ஜேற்றூட்டின் அன்புக் கணவரும், றவீந்திரன் (ஜேர்மனி), குணேந்திரன் (யா. மா.ச.), தனேந்திரன், சுரேந்திரன் (ஆசிரியர், Highland School, Hatton), சுகந்தி (கனடா), விஜியேந்திரன (டோகா) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், றஞ்சி (ஜேர்மனி), கொன்செப்ரா (புனித வளன் கத்தோலிக்க அச்சகம்), யூலியற் சகாயராணி (ஆசிரியர், யா/கன்னியர் மடம் ம. வித்தியாலயம்), பத்மராஜா (கனடா), றுகுணகுமாரி ஆகியோரின் அன்பு மாமனாரும், பங்கிராஸ், இமெல்டா, அத்தனாசியர், வெலிஸிற்றஸ், எட்வேட், பிரான்சிஸ் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெயமணி, இந்திராணி, புஸ்பராணி (யாழ். போதனா வைத்தியசாலை), ஜெயராணி, சந்திராணி, ராஜ்குமார் (டோகா), காலஞ்சென்ற சுவாம்பிள்ளை, செல்லையா, மலர், ரமணி ஆகியோரின் மைத்துனரும், நீக்கிலஸ், பாலேந்திரா, காலஞ்சென்ற அருள்ரெட்ணம், ரெட்ணராஜா, சியாமளா ஆகியோரின் சகலனும், ஜனீனா, எறேனா, லியோனா, எமேர்ஷன், துஷானி, சறுக்ஷன், கியூட்டன், எல்டன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 40, புதுவீதி, கொய்யாத் தோட்டத்திலிருந்து திருப்பலிக்காக கிறிஸ்து அரசர் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து அர்ச் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நாளை (27-08-1998) வியாழக்கிழமை பிற்பகல் 4-00 மணியளவில் (புதிய நேரம்) நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குணேந்திரன்
(மகன்)

(58663)

## 31 ஆம் நாள் நினைவலைகள்



## அமரர் மு. அண்ணாமலை

பிறப்பு: 10-01-1934

இறப்பு: 27-07-1998

திதி: 26—08—1998

அன்பின் ஐயாவே! எங்கள் அன்புத் தெய்வமே! எம்மை பிரிந்து முப்பத்தொரு நாள்கள் கழிந்து விட்டாலும் உங்கள் நீங்காத நினைவுகள் நிலைத்திடவும் ஆத்மா சாந்தி பெறவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

-- குடும்பத்தினர்.

தளைச்சான் தோட்டம்,
கொற்றாவத்தை,
வல்வெட்டித்துறை.

(58643)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளர்ச்சிப்படைகள் பின்வாங்குகின்றன!

## கொங்கோவில் திடீர்த் திருப்பம்

இன்ஸாசா, ஒகஸ்ட் 26

**கொங்கோ உள்நாட்டு யுத்தத்தில் திடீர்த் திருப்பம் ஏற்பட்டுள்ளது. ஜனாதிபதி கபீலாவுக்கு ஆதரவான அரசாங்கப் படைகள் தலைநகர் கின்ஸாசாவுக்கு தென்மேற்கே மூன்று நகரங்களை கிளர்ச்சியாளர்களிடம் இருந்து மீளவும் கைப்பற்றி உள்ளன. கிளர்ச்சிப் படைகள் பின்வாங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

கொங்கோ உள்நாட்டு யுத்தத்தில் ஜனாதிபதி கபிலாவுக்கு ஆதரவாக அங்கோலாப் படைகள் அனுப்பப்பட்டதை அடுத்து யுத்த நிலைவரத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த கிட்டோனா இராணுவத் தளத்தையும் அரச படைகள் கைப்பற்றி உள்ளன.

கொங்கோலின் எண்ணெய் வளம் மிக்க நகரமான றுவாண்டா, மற்றும் இரு துறைமுகங்கள் ஆகியவையும் அரச படைகளிடம் வீழ்ச்சி அடைந்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதே சமயம் போரை நிறுத்தி உள்நாட்டு நெருக்கடியை முடிவுக்குக் கொண்டு வரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கிளர்ச்சிப் படைகள் பின்வாங்குவதால் ஜனாதிபதி கபீலா பேரம் பேசத் தக்க நல்ல வலுவான நிலையில் இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (இ-9)

## ராஜீவ்கொலை மேன் முறையீட்டு விசாரணை

ராஜீவ்காந்தி படுகொலை தொடர்பான வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்ட 28 பேரின் மேன் முறையீட்டு மனுக்கள் மீதான விசாரணைகள் அடுத்த மாதம் 15 ஆம் திகதி ஆரம்பமாகும் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது,

மேன் முறையீட்டு மனுக்கள் மீதான விசாரணையை இரண்டு மாதங்களுக்குப்பின் போட வேண்டும் என்று மரணதண்டனை விதிக்கப்பட்டவர்களின் சார்பான வழக்கறிஞர் விதித்த கோரிக்கையை உச்ச நீதிமன்றம் நிராகரித்ததைத் தொடர்ந்தே புதிய திகதி நிர்ணயிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

## ஐவர் சுட்டுக்கொலை

கராச்சியில் ஒரு சட்டத்தரணி, இரண்டு அரசியல்வாதிகள் உட்பட ஐந்து பேர் நேற்று முன்தினம் சுட்டுக் கொல்லப்பட்டனர். (இ-9)

# மியான்மாரில் ஆர்ப்பாட்டம்!

ரங்கூன் ஒக. 26

மியான்மாரின் தலைநகர் ரங்கூனில் ஜனநாயக ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கலவரம் அடக்கும் பொலீஸாரினால் 120க்கு மேற்பட்டோர் கைதுசெய்யப்பட்டனர். ஏனையோர் விரட்டி அடிக்கப்பட்டனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் அமைதியாகவே தமது எதிர்ப்பைத் தெரிவித்ததாகவும், ஆயிரத்துக்கும் அதிகமான பார்வையாளர்கள் அவர்களுக்கு உற்சாகமூட்டிக் கொண்டிருந்தார்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அச்சமயம் இரண்டு வாகனங்களில் வந்த கலகம் அடக்கும் பொலீஸார் கலகக்காரர்களை கலைந்து போகுமாறு பணித்த போதிலும் எவரும் கலைந்து போகாமல் தொடர்ந்து ஒன்றரை மணிநேரம் ஆர்ப்பாட்டம் நடத்தினர். இதனையடுத்தே அவர்கள் மீது பொலீஸார் தடியடிப் பிரயோகம் செய்ததுடன் தொடர்ந்து கலகம் செய்தோரை கைது செய்தும் கொண்டு சென்றனர்.

ஜனநாயக ஆதரவு இயக்கத் தலைவியான ஆங்சான் சூகி தமது வாகனத்துக்குள் அமர்ந்தவாறு தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகிறார். (இ-9)

# தி.மு.க.வுடன் உடன்பாடு செய்யப்படமாட்டாது!

## பாரதீய ஜனதா செயலர் தெரிவிப்பு

சென்னை, ஒக. 26

தி.மு.கவுடன் எந்த விதமான உடன்பாடும் செய்து கொள்ளப்பட மாட்டாது.

மேற்கண்டவாறு சென்னையில் செய்தியாளர் மத்தியில் பேசிய பாரதிய ஜனதாக் கட்சிப் பொதுச் செயலாளர் வெங்கையா நாயுடு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பாரதிய ஜனதாக்கட்சி தலைமையிலான கூட்டணி அரசுக்கு அளிக்கும் ஆதரவை அ.தி.மு.க விலக்கிக்கொள்ள நேரிட்டால் தி.மு.க வுடன் பாரதீய ஜனதாக்கட்சி உடன்பாடு செய்து கொள்ள நேரிடும் என்று பத்திரிகையில் வெளியான செய்தி முற்றிலும் தவறானது.

அ.தி.மு.க.வுடனான பாரதீய ஜனதாக்கட்சியின் உடன்பாடு வலுவானது.

இப்படி அவர் கூறினார்.

இதேவேளை அ.தி.மு.க. செயலாளர் செல்வி ஜெயலலிதா, மத்தியில் உள்ள பாரதீய ஜனதா தலைமையிலான கூட்டணி அரசுக்குத் தனது ஆதரவை விலக்கிக் கொள்ள மாட்டார் என்று பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர் குஜாபா தாக்ரே நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

கூட்டணியின் உறுப்புக் கட்சிகள் தங்களது குறைகளைப் பகிரங்கமாக வெளியிடக் கூடாது என்றும் தாக்ரே தெரிவித்தார்.



சூடான் தலைநகர் கார்ட்டுமில் அமெரிக்க ஏவுகணைத் தாக்குதலுக்கு இலக்கான மருந்துத் தொழிற்சாலை தரைமட்டமாகக் கிடப்பதைப் படத்தில் காணலாம்.

இத் தொழிற்சாலையில் பயங்கர நச்சு ஆயுதங்கள் தயாரிக்கப்பட்டு வந்ததாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. (ஐ)

## இளவரசர் சார்ள்ஸ் ஞாபக மறதியால் அவதி

### சிகிச்சை அளிக்கப்படுகிறது

லண்டன், ஒக. 26

இளவரசர் சார்ள்ஸ் தனது நினைவாற்றலை விருத்தி செய்வதற்காக நிபுணர் ஒருவரிடம் ஆலோசனை பெற்று வருகிறார்.

உத்தியோக பூர்வ பேச்சுக்களின்போது தாம் சந்திக்கும் நபர்களின் பெயர்களை தம்மால் ஞாபகத்தில் வைத்திருக்க முடியாது இருப்பதாகவும் —

இதனால் பல இடையூறுகளை தாம் எதிர் நோக்குவதாகவும் சார்ள்ஸ் தெரிவிக்கிறார்.

இந்த நவம்பர் மாதத்தில் 50 வயதை அடையும் சார்ள்ஸுக்கு இருந்துவரும் ஞாபக சக்திக் குறைவை நீக்கி அவரது நினைவாற்றலை அதிகரிக்கச் செய்யும் வகையில் நிபுணர்கள் அவருக்கு சிகிச்சைகளையும், பயிற்சிகளையும் வழங்கி வருகின்றனர்.

தொடர்ந்து வழங்கப்பட்டு வரும் பயிற்சியினால் அவர் தனது நினைவாற்றலை விரிவுபடுத்தி வருகின்றார்.

விரைவில் அவர் அதிக பெயர்களை ஞாபகத்தில் வைத்திருக்கக்கூடிய விதத்தில் தேர்ச்சி பெற்று விடுவார் என அவருக்கு சிகிச்சை அளித்து வரும் நிபுணர் தெரிவிக்கிறார். [இ-9]

## சீனாவின் தாக்குதலை தடுக்க தாய்வான் தயார்

### தைப்பியில் ஏவுகணைகள்

தாய்வான் அரசு தலைநகர் தைப்பியில் பேற்றிஸட் ஏவுகணை எதிர்ப்புக் கருவிகளை நிறுவி உள்ளது.

சீனாவில் இருந்து ஏவுகணைத்தாக்குதல் நடத்தப்படலாம் என்ற எதிர்பார்ப்பில் இவை நிறுவப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. எந்த ஓர் ஏவுகணைத் தாக்குதலையும் இந்த ஏவுகணை எதிர்ப்புக் கருவிகள் தடுத்துவிடக் கூடியவை.

தாய்வானின் சனநெருக்கடி அதிகமான ஓர் இடத்தில் இந்த ஏவுகணை எதிர்ப்புக் கருவிகள் நிறுவப்பட்டுள்ளன.

இந்த ஏவுகணை எதிர்ப்புக்கருவிகள் வளைகுடா யுத்தத்தில் பாவிக்கப்பட்டவையிலும் பார்க்க அதிக சக்தி வாய்ந்தவை என்று தெரிவிக்கப்படுகிறது.

சீனா எதிர்ப்புத் தெரிவித்திருந்த போதிலும் அமெரிக்கா 200 இத்தகைய ஏவுகணை எதிர்ப்புக் கருவிகளை 1993 ஆம் ஆண்டில் தாய்வானுக்கு விற்பனை செய்திருந்தது. (இ-9)

உலக அரங்கில்

# பயங்கரவாதத்தை எதிர்ப்பதில் இரட்டை வேடம் இருக்கக்கூடாது

## ஆப்கான், சூடான் தாக்குதல் பற்றி வாஜ்பாய்

ஜெய்ப்பூர், ஒக. 26

"பயங்கரவாதத்தை எதிர்ப்பதில் சர்வதேச அளவில் அரசு பூர்வ நடவடிக்கைகள் அவசியம். ஆனால் அதில் இரட்டை வேடம் இருக்கக் கூடாது" இந்தியப் பிரதமர் வாஜ்பாய் மேற்கண்டவாறு கூறினார்.

ஜெய்ப்பூரில் கடந்த சனிக்கிழமை செய்தியாளர்கரிடம் அவர் கூறியதாவது:

மனித சமுதாயத்துக்கு எதிரான குற்றம் பயங்கரவாதம், அதற்கு எதிராக ஐ. நா. உறுதியான நடவடிக்கையை எடுத்துள்ளது. பயங்கரவாதச் செயல் நடந்தால் அனைத்து நாடுகளும் அதைக் கண்டிக்க வேண்டும்.

ஆனால் இந்தியாவிலோ, வேறு நாட்டிலோ பயங்கரவாதச் சம்பவங்கள் நடக்கும் பொழுது சிலர் ஓரவஞ்சனையான நிலையை மேற்கொள்கின்றனர்.

ஆப்கானிஸ்தானில் நஜிபுல்லா ஆட்சிக்கு எதிராக தலிபானுக்கு ஆதரவு அளித்தது அமெரிக்கா தான்.

ஆப்கானிஸ்தான் மீது தாக்குதல் நடத்துமுன் இந்தியாவை அமெரிக்கா கலந்து ஆலோசிக்கவில்லை. இப்படி அவர் கூறினார். (இ-10)

## பீஹாரில் ரயில் விபத்து

புதுடில்லி, ஒக 26

இந்திய மாநிலமான பீஹாரில் பயணிகள் ரயில் ஒன்றும் சரக்கு ரயில் ஒன்றும் மோதியதில் 40 பேர் காயமடைந்தனர்.

விஷமிகள் சிலர் தண்டவாளத்தில் செய்த குளறுபடி [illegible] இவ் விபத்து ஏற்பட்டுள்ளதாக செய்தி ஒன்று தெரிவிக்கின்றது. (இ-9)

# சுஹார்ட்டோவின் மருமகன் பதவி நீக்கம்

லண்டன், ஒக. 26

இந்தோனேசியாவின் முன்னாள் அதிபர் சுஹார்ட்டோவின் மருமகன் ஜெனரல் தபோவோ சிவியான்சோ மற்றும் இரு இராணுவ அதிகாரிகள் இராணுவத்திலிருந்து பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் கடத்தப்பட்டு, சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்ட விவகாரத்தில் சுஹார்ட்டோவின் மருமகனுக்கும் மற்றும் இரண்டு இராணுவ அதிகாரிகளுக்கும் உள்ள தொடர்பு குறித்து நடத்தப்பட்ட விசாரணைகளை அடுத்தே இவர்கள் பதவியிலிருந்து நீக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தோனேசிய முப்படைத் தளபதி ஜெனரல் விரான்சோ இவர்களின் பதவி நீக்கம் தொடர்பான அறிவிப்பை நேற்று முன்தினம் விடுத்தார்.

முன்னாள் அதிபர் சுஹார்ட்டோ கடந்த மே மாதம் பதவியிலிருந்து விலகினார்.

சுஹார்ட்டோ பதவி விலகியதை அடுத்து அவரின் மருமகனான தபோவோ அவரது முன்னைய பதவியான போரிடும் படையணிகளின் தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டு இராணுவ அதிகாரிகளுக்குப் பயிற்சி அளிக்கும் கல்லூரி ஒன்றின் அதிபராக நியமிக்கப்பட்டார்.

தொடர்ந்து இவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணைகள் நடத்தப்பட்டன. இவ் விசாரணைகளின் முடிவில் தபோவோவையும் மற்றும் 2 இராணுவ உயர் அதிகாரிகளையும் பதவி நீக்கம் செய்வதென முடிவு செய்யப்பட்டது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

டைனியா டபிள் கசற் பிளேயர் and CD Radio. Vidio CD உம் பொருத்தக் கூடியது. றெக்கோடிங் பாரிற்கு உகந்தது. விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம். க. அழகரத்தினம் நீர்வேலி கந்தசாமி கோயில் வடக்கு வீதி, (58630)

### விற்பனைக்கு உண்டு

அல்ஷேசன் பெண் நாய் விற்பனைக்கு உண்டு (வயது 8 மாதம்.) தொடர்பு: மார்க்கண்டு M. S லேன், கோண்டாவில் கிழக்கு, இன்று பார்வை இடலாம் [58638]

### தவறிவிட்டது

துயா.ரா.சா மலர்க்காம பிகை ஆகிய எனது தேசிய, விசேட அடையாள அட்டைகள் (இல. 708350761V) 22-08-98 அன்று நல்லூரில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து யாழ். போதனா வைத்திய சாலை காரியாலயத்தில் ஒப்படைத்து உதவவும். [58627]

திருமதி த. பகவதி அம்மா ஆகிய எனது விசேட அடையாள அட்டையும் கடற்படை அனுமதிப் பத்திரமும் தாவடிக்கு அண்மையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 361, கஸ்தூரியார் வீதி, உதயன் பணிமனையில் ஒப்படைத்து உதவவும். [58631]

### மணமகள் தேவை

1960 ஆம் ஆண்டு பூ நட்சத்திரமுடைய 4 இல் செவ்வாய் உள்ள இலண்டனில் Computer படித்து இலண்டனில நிரந்தர வதிவிடம் பெற்ற மணமகன் இங்கு வந்து திருமணம் செய்வார். குறிப்பு. புகைப் படத்துடன் தொடர்பு கொள்ளவும். துர்க்கா திருமண சேவை 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (58642)

### யாழ்ப்பாணம்

வானொலியில் பொறாமை நாடகம் கேட்டீர்களா? அதை எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நூல்கள், 1. யாழ்ப்பாணத்தில் அந்த ஆறு மாதங்கள் 2. வீரகேசரிக்கட்டுரைகள், 3. நாடகம் எழுதுவது எப்படி? ரூபா 50 [58618]

### ENGLISH MATHS

ஆண்டு O/L வரை Distinction, Credit பெறுபேறுடைய ஆரம்பத்திலிருந்து Paper Class வரையும் Spoken English உம கற்பிக்கப்படும. ஆசிரியர் 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி. [58502]

---

வேலணை பனை - தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

## பதவி வெற்றிடம்

1. பதவி: கிளை முகாமையாளர்
2. வயது: 01 - 08 - 98 அன்று 18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
3. கல்வித் தகைமைகள்: எண்கணிதம் சி, தமிழ் சி ஆகிய இரு திறமைச் சித்திகளுடன் மொத்தமாக ஆறு பாடங்களில் சித்தியெய்தி இருக்கவேண்டும்.
   அல்லது
   கூட்டுறவுப் பயிற்சி சாதாரண பிரிவில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.
   அல்லது
   இரண்டு வருடம் கிளை முகாமையாளராகப் பணிபுரிந்தவராக இருத்தல் வேண்டும்.
4. குறிப்பிட்ட பிணைப்பணம் கட்டக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
5. சங்க எல்லைக்கு உட்பட்டவராய் இருத்தல் வேண்டும்.
6. சம்பள அளவுத்திட்டம் 30 × 98 33]= 2950 00
7. கிராம சேவையாளரின் நற்சான்றிதழ் இணைக்கப்படல் வேண்டும்.
8. 07 - 09 - 98 க்கு முன்னதாக விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
9. விண்ணப்பப்படிவங்களைச் சொந்தக் கையெழுத்தில் தயாரித்து அனுப்பவும்.

(58651) — பொது முகாமையாளர்

---

## 95 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி

### ஞானமூர்த்தி பாலேஸ்வரி

[ரீச்சர்]

தோற்றம் 18 03-1952 — மறைவு 24-05-1998

அம்மா! அம்மா! என ஏங்குது அன்பு மழலை
மகளே! நீ எங்கே என்குது பெற்ற உள்ளம்!
தேடி அழுகின்றன சக உதிரங்கள்!
உன்னைப் புகழாதோர் யாருமில்லை!
உன்மீது பொறாமை கொண்டோர் ஒரு சிலரே!
அன்புச் செல்வமே நீ எங்கு சென்றாய்?
ஏன் சென்றாய் எப்படிச் சென்றாயோ?
செய்வதறியாது கலங்குகின்றோம்!
கணவன் என்ற பெயரில் வந்தானோ?
காலன் உன்னைக் கவர்ந்தெடுக்க?
பாரினில் போற்றிட வாழ்ந்த நீ
பத்தினியாய்ப் போனாயோ கயவருக்குக் காண்பிக்க!

பெற்றோர்.

56, பிரப்பங்குளம் வீதி,
யாழ்ப்பாணம். [58652]

---

## பெண் மீதான சூட்டுச்சம்பவம்:

# அரியாலைவாசி பிணையில் விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 26

அரியாலையில் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் இளம் பெண் ஒருவரை சுட்டுக்கொல்ல முயற்சி செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த பின்னர் யாழ். மாவட்ட நீதிமன்றில் நேற்று முன்தினம் ஆஜர் செய்யப்பட்ட இளைஞர் ஒருவரை 5 ஆயிரம் ரூபா பிணையில் விடுவிக்க மேலதிக நீதிவான் மு. திருநாவுக்கரசு அனுமதி வழங்கினார்.

இவ்வழக்கு யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. சந்தேக நபரின் சார்பில் சட்டத்தரணி திருமதி சறோஜினி இளங்கோவன் மன்றில் ஆஜரானார்.

சந்தேக நபரான சிவஞானம் மனோகரன் (அரியாலை) தமது சொந்த இடத்தை விட்டு வேறு இடத்துக்குச் செல்லக்கூடாது எனவும் பிரதி திங்கள் தோறும் நீதிமன்றத்திற்கு சமுகமளித்து கையெழுத்து இட வேண்டும் என்றும் நீதிவான் உத்தரவிட்டார். (ஐ-5)

---

## பனை அபிவிருத்திச் சபை

பனைத் தொழில் சாதனங்களைக் கண்டு பிடிப்பதற்கான

## பகிரங்கப் போட்டி

1. பனை மரம் ஏறி இறங்குவதற்கான சாதனம்.
2. பனை மரத்தில் ஏறாமலேயே நிலத்திலிருந்து பாளை சீவிக் கள் எடுக்கும் சாதனம்.

போட்டியில் தனிநபர்களோ அல்லது ஸ்தாபனங்களோ பங்குபற்றலாம்.

தெரிவு செய்யப்படும் ஒவ்வொரு சாதனத்துக்கும் தலா ரூபா 100,000,00 (ரூபா ஒரு லட்சம்) பரிசு வழங்கப்படும்.

மேலதிக விவரங்களுக்கும் நிபந்தனைகளுக்கும் தொடர்பு கொள்ளவும்:

தலைவர்
பனை அபிவிருத்திச் சபை
244, காலி வீதி,
கொழும்பு - 04.

பொது முகாமையாளர்
பனை அபிவிருத்திச் சபை
53, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

விண்ணப்பிக்கவேண்டிய கடைசித் திகதி: 15 - 09 - 1998

சாதனங்கள் சமர்ப்பிக்க வேண்டிய கடைசித் திகதி: 31 - 12 - 1998

(சி/4660)

---

யாழ். அரியாலை - நீர்நொச்சித்தாழ்வு

## ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் 1998

| | | |
|---|---|---|
| கொடியேற்றம்: | — 27 - 08 - 98 | வியாழக்கிழமை காலை 9. 00 மணி |
| கைலாயவாகனம்: | — 02 - 09 - 98 | புதன்கிழமை மாலை 4. 30 மணி |
| வேட்டைத் திருவிழா: | — 03 - 09 - 98 | வியாழக்கிழமை மாலை 4. 30 மணி |
| சப்பறத் திருவிழா: | — 04 - 09 - 98 | வெள்ளிக்கிழமை மாலை 4. 30 மணி |
| இரத உற்சவம்: | — 05 - 09 - 98 | சனிக்கிழமை காலை 7. 20 மணி, |
| தீர்த்த உற்சவம்: | — 06 - 09 - 98 | ஞாயிற்றுக்கிழமை காலை 7. 20 மணி |

● பழைய நேரப்படி

ஆலய பரிபாலன சபை

விளம்பர உதவி:
மகோற்சவம் சிறப்புற வாழ்த்துகின்றோம்.
A. M. T. தபால் கட்டைச் சந்தி,
(சிறீ கடை)
அரியாலை, யாழ்ப்பாணம்.
[58645]

---

# HARCROS
## AGROCHEMICALS

**மன்னார், வவுனியா**
மற்றும்
**திருகோணமலை**

ஆகிய இடங்களுக்கு விநியோகஸ்தர்கள் தேவை. விண்ணப்பிப்பவர்கள் தங்களிடமுள்ள வசதிகள் மற்றும் வங்கி வழங்கவுள்ள உத்தரவாதம் பற்றிய விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

விற்பனை முகாமையாளர்
330, டி. பி. ஜாயா மாவத்த
கொழும்பு - 10

(சி/4622)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலில் சமாதானம்; பிறகு அபிவிருத்தி

# அதுவே தேவை என்கிறார் யாழ். மேயர்

## அமெரிக்க பேராசிரியர்களிடம் வலியுறுத்து!

யாழ்ப்பாணம், ஒக. 26

சர்வதேச சமூகம் முதலில் இலங்கையில் நிரந்தர சமாதானம் ஏற்பட அதிகளவில் முயற்சிக்க வேண்டும். அதன் பின்னரே அபிவிருத்திப் பணிகளில் கவனம் செலுத்த வேண்டும்.

யாழ். மாநகர மேயர் பொ. சிவபாலன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த வாரம் யாழ்ப்பாணம் வந்திருந்த அமெரிக்கப் பேராசிரியர்களிடமே அவர் இதனைத் தெரிவித்தார்.

சான்பிரான்ஸிஸ்கோ பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த இணைப்பேராசிரியர் அமிதா சாஸ்திரி, உதவிப் பேராசிரியர் ஈரோல் எஸ். அன்டர்ஸன் ஆகியோர் கடந்த சனியன்று யாழ். மாநகர மேயரைச் சந்தித்து உரையாடினர்.

அவர்களுடன் கலந்துரையாடிய போது மேயர்மேலும் கூறியதாவது:-

சமாதானம் என்னும் நிரந்தர அத்திவாரத்தின் மேலேயே நாம் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலமே அபிவிருத்தியின் பயன்களை மக்கள் முழுமையாகப் பெறமுடியும்.

நாம் முடிந்தவரை மக்களுக்கான அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். — என்றார்.

பேராசிரியர்கள் இருவரும் யாழ். பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றிலும் பங்குபற்றினர். ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவன (ஜி.ரி.சற்) அதிகாரிகளையும் சந்தித்துப் பேசினர்.

(ஐ-6)

# தொண்டர் ஆசிரியர்களின் விவரம் பதிய அறிவுறுத்து

யாழ்ப்பாணம் ஒ.. 26

கல்வி அமைச்சினால் அனுப்பப்பட்டு தற்போது பாடசாலை அதிபர்களால் பூரணப்படுத்தப்பட்டு வரும் தொகை மதிப்பீட்டுப் படிவங்களில் எப். ரி. படிவத்தில் நிரல் இலக்கம் II இல் பிரிவு 5 இல் 90 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை கடமையாற்றும் தொண்டர் ஆசிரியர்களின் விவரங்களும் பதியப்படல் வேண்டும்.

இவ்வாறு இலங்கை வித்தியால அதிபர்சங்கம் வலயம் I, வலயம் II ஆகியவற்றின் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவித்துள்ளது.

கல்வி உயர் கல்வி அமைச்சின் இம் மாதம் 17 ஆம் திகதிக் கடிதத்தின்படி கடந்தமாதம் 27 ஆம் திகதி நடைபெற்ற கல்வி உயர் கல்வி அமைச்சின்புள்ளிவிவரக் கிளையின் கூட்டத்தில் 1990 ஆம் ஆண்டுக்கு முன்னர் கல்வி அதிகாரிகளால் நியமனம் வழங்கப்பட்ட தொண்டர் ஆசிரியர்கள் இன்றுவரை கடமையாற்றி வந்தால் அவர்களின் விவரங்களும் எப். ரி. படிவத்தில் பதியப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள ஒழுங்கு செய்து தர வேண்டும் என்று இலங்கை வித்தியாலய அதிபர் சங்கத்தின் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-6)

## சிகரட் கம்பனியில் கொள்ளை

கொழும்பு, ஓக. 26

கந்தானையிலுள்ள சிகரட் நிறுவனம் ஒன்றில் காவலாளியைக் கொலை செய்த பின்னர் 18 லட்சம் ரூபா பணம் இனந்தெரியாதோரால் கொள்ளையிடப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இரவு நேரக் காவலாளியை அலவாங்கினால் குத்திக் கொலை செய்த பின்னர் சிகரட் நிறுவனத்தின் பூட்டை உடைத்து அங்கிருந்த 18லட்சம் ரூபா பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது.

(ஐ-3-9)

# தொல்லை தவிர்ப்புக் குழு ஆலோசனை வரவேற்கும்

இளைஞர், யுவதிகள் கைது செய்யப்படுவது குறித்து விசாரணை செய்யவென அமைக்கப்பட்ட தொல்லை தவிர்ப்புக் குழுவுக்குப் புத்திஜீவிகள் மற்றும் மனித உரிமை அமைப்புக்களின் பிரதிநிதிகள், தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகள் தமது ஆலோசனையை வழங்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் உத்தரவின் பேரில் அமைக்கப்பட்டுள்ள தொல்லை தவிர்ப்புக்குழு தற்போது கிரமமாகச் செயற்பட்டு வருகின்றதெனவும்—

இதுவரை இளைஞர், யுவதிகள் கைது செய்யப்பட்டமை குறித்து செய்யப்பட்ட 90 முறைப்பாடுகளில் 40க்கு தீர்வு காணப்பட்டுள்ளதாகவும், தொல்லை தவிர்ப்புக் குழுவின் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

இதுவரை கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் பெரும்பாலானவை கொழும்பு நகரில் வாழ் வர்களாலேயே செய்யப்பட்டுள்ளதாகவும்—

தொல்லை தவிர்ப்புக் குழு மேற்கொண்ட முயற்சியின் மூலம் விடுவிக்கப்பட்டவர்களில் நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டவர்களும், தடுத்து வைக்கப்பட்டு நீதிமன்றில் ஆஜராக்கப்பட்டவர்களும், எந்த விதமான குற்றச் சாட்டுக்களும் இல்லாது தடுத்து வைக்கப்பட்டவர்களும் அடங்குகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 21ஆம் திகதி மட்டும் அமைச்சர் தொண்டமான் இரண்டு பேரின் கைது தொடர்பாகக் குழுவுக்கு முறைப்பாடு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

[இ-7]

## பிரதேச சபை கூட்டம்

வடமராட்சி, ஓக. 26

கரவெட்டி பிரதேச சபையின் விசேட பொதுக் கூட்டம் நாளை வியாழக்கிழமை முற்பகல் நெல்லியடி பொது நூலக மண்டபத்தில் சபைத் தலைவர் செ. சுந்தரமூர்த்தி தலைமையில் நடைபெறும்.

(இ-173)

## சிரமதானம்

சுன்னாகம், ஒக. 26

சுன்னாகம் பழைய பொலீஸ் நிலையப் பகுதியை சுன்னாகம் வர்த்தகர்கள் சிரமதானம் மூலம் துப்புரவு செய்தனர். கடந்த பல காலமாக இப்பகுதி பற்றைகள் மண்டிக் காணப்பட்டது குறிப்பிடத்தக்கது.

(இ-27)

# சித்த மருத்துவ நூல்களின் பாதுகாப்பில் அக்கறை குறைவு

## அவற்றை மீள்பதிப்புச் செய்யவேண்டும்

யாழ்ப்பாணம், ஒக. 26

யாழ்ப்பாணத்தில் மதிப்புப் பெற்றிருந்த பழைய சித்த மருத்துவ நூல்களைப் பாதுகாப்பதில்அக்கறை குறைந்து கொண்டே வருகிறது. இதனால் இந்த வைத்தியத்தைப் பயில்வதற்கென முக்கிய நூல்களைப் பெற்றுக்கொள்ள முடியாது அவை அரிதாகிவிட்டன. அதனால் அவற்றை மீளப் பதிப்பிடுவது அவசியம்.

இவ்வாறு கடந்தமாத இறுதியில் யாழ்ப்பாணம் லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற, சித்த வைத்திய நூல்கள் மீள் பதிப்புக்குழு அங்குரார்ப்பணக் கூட்டத்தில் குழுவின் போசகரும், லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி அதிபருமான வைத்திய கலாநிதி திருமதி க. பரமசிவம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில்—

யாழ்ப்பாணத்தில் நல் மதிப்பைப் பெற்றிருந்த பழைய சித்த மருத்துவ நூல்கள் 1928—1936 ஆண்டு காலப் பகுதியிலேயே அச்சிடப்பட்டன.

அதன்பின் அவை ஆராய்ச்சி செய்யப்படவுமில்லை, மீள் பதிப்புக்கள் வெளிவரவுமில்லை. இந்த ஏடுகளை அச்சேற்றியவர்கள் எமது நன்றிக்குரியவர்கள். ஆனால், அப்பணி தொடரும் நிலை அற்றே காணப்படுகிறது.

இந் நூல்கள் ஆராய்ச்சி செய்யப்பட்டு, சிறந்த பாடங்கள் கண்டு பிடிக்கப்படவேண்டும். இப் பணிகளைச் செய்வதற்கு ஆட்பலமும், பணபலமும் ஒருங்கிணைய வேண்டும். இதனை மேற்கொள்ளத் தீவிர ஈடுபாடு கொண்ட ஒரு குழு அமைத்தல் அவசியமாகிறது—என்றார்.

இக் கூட்டத்தில் சித்த வைத்திய நூல்கள் மீள்பதிப்புக்குழு தெரிவு நடைபெற்றதை அடுத்து, இந்நூல்களில் மிக முக்கியத்துவம் வாய்ந்த பரராசசேகரம் கர்ப்ப ரோகம், பாலரோக நிதானம் பகுதிகளை, மாணவர்கள் நலன் கருதி முதலில் மீள் பதிப்புச் செய்து வெளியிடுவது என்றும் பின் ஏனைய நூல்களையும் அச்சிடுவதுஎன்றும் தீர்மானிக்கப்பட்டது.

[இ-15]

# பிரதமர் பதவியில் பௌஸிக்கும் கண்?

கொழும்பு, ஒக. 26

பிரதமர் பதவியில் அமர்வதற்கான வாய்ப்பு அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கே வழங்கப்பட வேண்டும். அத்தகைய வாய்ப்பு அளிக்கப்பட்டால் பிரதமர் பதவிக்குப் போட்டியிட்டு நிச்சயம் வெற்றி பெறுவேன்.

போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஏ. எச். எம். பௌஸி கொழும்பு பத்திரிகை ஒன்றுக்கு மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பிரதமர் பதவி எனக்கு அளிக்கப்பட்டால் அதனை ஏற்று மிகத் திறமையாகச் செயற்படுவேன். என்னை பிரதமராகத் தெரிவு செய்வதற்கான ஆதரவைத் தர நாடாளுமன்றத்தில் உள்ள அரச தரப்பு உறுப்பினர்கள் தயாராக உள்ளனர்—என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

# யாழ். பிரதம தபாலகம் புதிய இடத்தில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக. 26

யாழ். பிரதம தபாலகம் திங்கள் முதல் யாழ். நகரின் மத்தியில் ஸ்ரான்லி வீதியில் உள்ள ஒரு கட்டடத்துக்கு இடம் மாற்றப்பட்டிருக்கிறது.

புதிய இடத்தில் தபாலகத்தை ஆரம்பித்து வைக்கும் சம்பிரதாய பூர்வ நிகழ்ச்சி திங்கள் நண்பகல் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பதில் பிரதி அஞ்சல் மாஅதிபர் ஏ. கே. சிவஞானம், பிரதம தபாலதிபர் எம். திலகநாதன், பிராந்திய தபால் அத்தியட்சகர் எஸ். தர்மராஜா, யாழ். பிரதித் தபாலதிபர் எஸ். மார்க்கண்டன் ஆகியோர் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

யாழ். பிரதம தபாலகம் 1987 ஆம் ஆண்டு முதல் பிரதான வீதியில் உள்ள மாக்பெற் கட்டடத்தில் இயங்கி வந்தது.

(ஐ-6-15-173)

# 'லங்கா முடித' கப்பலில் அரிசி, பருப்பு, சீனி வந்தன

## காங்கேசனில் இறக்கம்

அத்தியாவசியப் பொருள்களுடன் வடக்கே வந்துள்ள 'லங்கா முடித' கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

ஆயிரத்து 500 மெற்றிக் தொன் அரிசி, 500 மெற்றிக் தொன் சீனி, 250 மெற்றிக் தொன் பருப்பு ஆகியவை இக்கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வடபகுதி புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபைக்கு என எடுத்து வரப்பட்டுள்ள இப்பொருள்களுடன் மேலும் பல பொருள்களும் இக்கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ளன.

(ஐ-6)

# மரக்கறியின் விலை வன்னியிலும் வீழ்ச்சி

வவுனியா, ஒக. 26

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் மரக்கறி விலை பெருமளவு வீழ்ச்சியடைந்துள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த சில வாரங்களாக விலைஉயர்ந்து காணப்பட்ட மரக்கறிகள் தற்போது மிகவும் குறைந்த விலையில் விற்கப்படுவதாகவும்-

இதனால் அதிகளவு பயிர்களை விளைவித்த விவசாயிகள் நஷ்டமடைந்துள்ளார்கள் எனவும்- தெரிவிக்கப்படுகின்றது.

பாகற்காய், பயற்றங்காய், மரவள்ளி, பூசணி, புடோல் போன்ற ரக்கறிகள் கிலோ பத்து ரூபாவாகவும்-

வெங்காயம், தக்காளி போன்றவை கிலோ இருபது ரூபாவாகவும்-

கத்தரி, வெண்டி போன்றவை கிலோ 12 ரூபாவாகவும் விற்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணத்திலும் மரக்கறிவிலை ஓரளவு குறைந்திருப்பது தெரிந்ததே.

(இ-9)

## இணைப்பாளர்

சுன்னாகம், ஒக. 26

யாழ். அரச செயலகத்தில் உள்நாட்டு வியாபாரப் பிரிவில் கடமையாற்றும் கீ. நவரத்தினம் உள்நாட்டு வியாபாரப் பிரிவின் கடமைகளை ஒருங்கிணைக்கும் முகமாக, மருதங்கேணி, கரவெட்டி, தெல்லிப்பழை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளுக்கான இணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

(இ-27)

# பாரிய அபி. திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு இல்லை

## ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு ஒக. 26

பெருமளவு நிதியை ஒதுக்கவேண்டிய தேவைகளையுடைய பாரிய அபிவிருத்தித் திட்டங்களை எந்தவொரு அமைச்சும் தற்போதைக்கு முன் வைக்கக் கூடாதெனவும் அடிக்கடி குறை நிரப்புப் பிரேரணைகளைக் கொண்டுவரக் கூடாதெனவும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சகல அமைச்சர்களையும் பணித்துள்ளார்.

கடந்த 19 ஆம் திகதி புதன்கிழமை இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போதே ஜனாதிபதி இந்த வேண்டுகோளை விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாடு இன்று பெரும் நிதிநெருக்கடியை எதிர்நோக்கிக்கொண்டிருப்பதாகவும், இந்தநெருக்கடியிலும் கூட அரசாங்கம் யுத்தத்திற்கு பெருமளவு நிதியை ஒதுக்கீடு செய்யவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி அமைச்சர்களுக்கு தெரிவித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாகவே பெரும்நிதிச் செலவை ஏற்படுத்தக்கூடிய பாரிய அபிவிருத்தித் திட்டங்களை தற்போதைக்கு மேற்கொள்ள வேண்டாமெனவும்—

இதுபோன்ற திட்டங்களை அமைச்சுக்கள் தயாரிப்பதைத் தவிர்த்துக் கொள்ளவேண்டுமெனவும்—

அதேபோன்றே கண்டபடி குறைநிரப்புப் பிரேரணைகளை முன்வைப்பதையும் அமைச்சுக்கள் தவிர்க்கவேண்டும் எனவும் — ஜனாதிபதி தெரிவித்ததாக தெரிவிக்கப்பட்டது.

(இ-7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குண்டை வெடிக்க வைக்கும் பிரபாகரன் கூட கல்வியின் பெறுமதியை ஏற்றுள்ளார்!

## கல்வி அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு, ஓகஸ் 26

குண்டுகளை வெடிக்க வைக்கும் விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் கூட கல்வியின் மகத்துவத்தை ஏற்றுக் கொண்டுள்ளார்.

அண்மையில் மாத்தறை மாவட்டத்தில் உள்ள மஹாமாயா மகளிர் கல்லூரியில் கட்டடம் ஒன்றைத் திறந்து வைத்துப் பேசுகையில், கல்வி, உயர்கல்வி அமைச்சர் ரிச்சாட் பத்திரான மேற்கண்டவாறு கூறினார்.

கல்விக்கு மதிப்புக் கொடுப்பதனாலேயே இதுவரை எந்த ஒரு பரீட்சை நிலையத்திலும் பிரபாகரன் குண்டுகளை வெடிக்க வைக்கவில்லை என்றும் அமைச்சர் கூறினார்.

"சகல பாடசாலைகளையும் பிரபல பாடசாலைகளாக்க அரசாங்கத்தால் முடியாது. ஆசிரியர்கள், பெற்றோர் மற்றும் மாணவர்கள் ஆகியோராலேயே ஒரு பாடசாலையைப் பிரபல பாடசாலை ஆக்க முடியும். இவற்றுக்குத் தேவையான நிதியை அரசு வழங்கும்" என்றும் அவர் கூறினார்.

(இ-10)


## NEW SCIENCE HALL

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

### 99 A/L

( 98 பரீட்சைக்கு தோற்றியவர்களுக்குரியது )

DAY CLASS

எமது வழமையான ஆசிரியர் குழு

ஆரம்பம்.- 01 - 09 - 98 செவ்வாய்க்கிழமை

காலை 7-00 மணி

(58626)



## யாழ்ப்பாணக் கல்வி நிலையம்

THE JAFFNA EDUCATION CENTRE

சாந்தி சினிமா முன்பாக [மேல் மாடியில்]

SPOKEN ENGLISH

With

GRAMMAR, சிங்களம்

SHORT HAND TYPING ஆகிய பாடங்கள் இருமொழிகள் மூலமும் கற்பிககப்படுகின்றன பாடத்திட்டம முடிவடைந்ததும் சான்றிதழ வழங்கப்படும.

புதிய பிரிவு ஆரம்பம் 28-08 98

- நிர்வாகி

(58640)



## இரண்டாவது பிறந்தின வாழ்த்து



செல்வன்

### தர்மரத்தினம் ஜதீசன்

26 - 08 - 98

நீர்வேலி தெற்கைச் சேர்ந்த

தர்மரத்தினம் - கிரிஜா

தம்பதிகளின் அருந்தவப் புதல்வன் ஜதீசன் தனது இரண்டாவது பிறந்தநாளை இன்று ( 26 - 08 - 98) தனது இல்லத்தில் விமரிசையாகக்கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மம்மா, மாமா குடும்பத்தினர், பெரியப்பா குடும்பத்தினர், ஆசையப்பா குடும்பத்தினர், அத்தை குடும்பத்தினர் மற்றும் உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் இறைவன் அருளால் பல்கலையுங் கற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகிறார்கள்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

சி. தர்மரத்தினம்

[ 58625 ]


## மண்ணெண்ணெய் தாராளம்

அரியாலை, ஓக. 26

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகளில் மண்ணெண்ணெயைத் தாராளமாக மக்கள் பெற்றுக் கொள்ளலாம் என்று சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

சங்கத்தின் கிளைகளுக்குப் போதியளவு மண்ணெண்ணெய் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பொது மக்கள் பங்கீட்டு அட்டை இன்றி மண்ணெண்ணெயைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-17)

## நாணயக்குற்றி தொலைபேசி

உரும்பராய், ஓக. 26

உரும்பராய்ச் சந்தியில் நாணயக்குற்றி தொலைபேசி அமைக்கப்பட்டு செயற்பட்டு வருகிறது.

(இ-154)

## உரும்பிராயில் மின் மாற்றி

உரும்பிராய், ஓக. 26

இலங்கை மின்சார சபையினால் உரும்பிராய்ச் சந்தியில் புதிய மின்மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

உரும்பிராய்ப் பகுதிக்கு முழுவதற்கும் 24 மணி நேரமும் மின்சாரம் வழங்குவதற்கான முன்னேற்பாடாக இது அமைக்கப்பட்டுள்ளது.

(இ-154)

## நுளம்பு

உரும்பராய், ஓக. 26

உரும்பராய்ஊரெழுப்பகுதிகளில் நுளம்புத தொல்லை அதிகரித்துள்ளது. இரவு நேரங்களில் இவற்றின் தாக்கம் அதிகமாக உள்ளது.

(இ-154)

## 6 லொறிகளை பொலீஸார் கைப்பற்றினர்

கொழும்பு, ஓக. 26

கொழும்பு வெள்ளவத்தை பகுதியில் தடைசெய்யப்பட்ட பிரதேசத்துக்குள் அனுமதி பெறாமல் சென்ற ஆறு லொறிகள் பொலீஸாரினால் கைப்பற்றப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளன.

திங்கள் காலை மேற்படி ஆறு லொறிகளும் வெள்ளவத்தை தடை செய்யப்பட்ட பகுதிக்குள் நுழைந்ததை அவதானித்த பொலீஸார் அந்த ஆறு லொறிகளையும் மறித்துத் தடுத்து வைத்திருந்த பின்னர் விசாரணைகளை மேற்கொண்ட பொலீஸார் அந்த லொறிகளை நீதிமன்றில் பாரப்படுத்தினர்.

அந்த லொறிகள் தவறுதலாக அந்தப் பகுதிக்குள் பிரவேசித்ததாகக் குறிப்பிட்டு அவற்றை விடுவிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டதைத் தொடர்ந்து லொறிகள் விடுவிக்கப்பட்டன.

(ஐ -3-9)

## மதகு திறந்துவைப்பு

அரியாலை, ஓக. 26

அரியாலையில் புனரமைக்கப்பட்ட மதகு ஒன்றை யாழ். மாநகர மேயர் பொன். சிவபாலன் கடந்த வாரம் திறந்துவைத்தார்.

அரியாலை புவனேஸ்வரி அம்பாள் வீதியில் சேதமடைந்து தூர்ந்துபோய் இருந்த மதகே மீள புனரமைக்கப்பட்டு யாழ். மாநகர மேயரால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மாநகர உறுப்பினர் கேசு கந்தையன், மேயரின் செயலர் பூலோகரட்ணம் ஈ. பி. ஆர். எல். எவ் மாநகர உறுப்பினர் மங்களநேசன் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் திறப்பு விழாவில் கலந்து கொண்டனர்.

(இ-17)


## இறையரசு அறிவிப்பு

கத்தோலிக்க திருச்சபையின் ஞாயிறு திருப்பலி வாசகங்களுக்குரிய, தியானங்களும் நாளாந்த வாசகக் குறிப்புகளும் உள்ளடக்கிய "இறையரசு அறிவிப்பு" 3 ஆம் பாகம் (திருவழிபாட்டு 3 ஆம் ஆண்டு) எம்மிடம் உண்டு.

விலை ரூபா 100/- குருமாருக்கு சலுகை உண்டு.

திருவழிபாட்டு நிலையம், ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

யோசவ் வாஸ் மறைக்கல்வி நிலையம், கொழும்பு 8

அருட்தந்தை ம. இ. பயஸ், நாவாந்துறை.

(58644)



## யாழ்/பேராதனை வெளிவாரி பட்டப்படிப்புக் கற்கை நெறிகள்

G. A. Q., BA I, BA II

எமது நிறுவனங்களில் ஆரம்பமாகவுள்ளன.

உயர் கல்வியகம்
V.M. றோட், பருத்தித்துறை.

யாழ். BEACON
நெல்லியடி, கரவெட்டி. (திருஇருதயக் கல்லூரி முன்பாக)

| | | |
|---|---|---|
| இந்துநாகரிகம் | — | கலாநிதி காரை சுந்தரம்பிள்ளை |
| தமிழ் | — | திரு ஸ்ரீபதி. திரு கமலரூபன் |
| அரசறிவியல் | — | திரு. மனோகரன் |
| மெய்யியல் | — | திரு. சத்தியசீலன் |
| வர்த்தகம் / முகாமைத்துவம் | — | திரு. தேவச்சந்திரன் / திரு. சண்முகலிங்கம் |
| பொருளியல் | — | திரு. அன்ரனி |
| | — | திரு. செல்வி ஜெயவதனா |
| கணிதம் | — | திரு. சாந்தன் |
| ஆங்கிலம் | — | திரு. சண்முகநாதன் |

★ கடந்த காலங்களில் மிக உயர்ந்த பெறுபேறுகளை இந் நிறுவன மாணவர்கள் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஆரம்பம்: 29 - 08 - 98 9. 00 a. m.

[4654]



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
13
—
01
—
1973



உதிர்வு
27
—
07
—
1998

அமரர்

### கனகரெத்தினம் லதாகுமார்

(லதா)

ஆறுதல் சொல்ல யாரிருந்தென்ன— உன்
ஆருயிர் அன்புக்கு ஈடாகுமா— தேறுதல்
சொல்ல யாரிருந்தென்ன லதாவே— உன்
திருமுகம் பார்த்தால் போதுமே— எம்மை
ஆறாத் துன்பத்தில் ஆழ்த்திவிட்டு எங்கு சென்றாய்?
ஆறாது லதாவே எம் துயரம்!

உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உன் பிரிவால் துயருறும்
அம்மா, மனைவி, அக்கா,
தம்பிமார், தங்கை.

5A, வட்டாரம்,
நயினாதீவு.

(58615)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## போராட்டம் தொடரட்டும்!

''அறிவிக்கப்பட்டுள்ள நிவாரணக் குறைப்பு வன்னிப் பிரதேசத்தில் மட்டுமே நடைமுறைப்படுத்தப்படும். யாழ். குடாநாட்டில் நிவாரணக் குறைப்பு இடம்பெறாது.

— இவ்வாறு ஈ.பி.டி.பி. தூதுக்குழுவுக்கு உறுதி கூறியிருக்கின்றார் ஜனாதிபதி.

ஈழத் தமிழர்களை வடக்கு, கிழக்கு எனப் பிரித்தாளும் சூழ்ச்சியில் ஈடுபட்ட பெரும்பான்மை இனம் இப்போது வடக்குத் தமிழர்களையே குடாநாடு, வன்னி என்று பிரித்து வைக்க முயற்சிக்கின்றது.

ஈழத் தமிழர்கள் தனது நாட்டுப் பிரஜை என்று ஸ்ரீலங்கா அரசு கருதுமானால் அவர்கள் எல்லோரையும் சமமாகப் பார்க்க வேண்டிய கடப்பாடு அதற்கு உள்ளது.

இந்த யுத்தத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப் பிரதேசத்தில் உள்ள தமிழர்களே.

போர் நலிவால் மாத்திரமல்லாமல், ஸ்ரீலங்கா அரசும் அதன் யுத்த இயந்திரங்களும் விதித்துள்ள பொருளாதாரத் தடை, சுகாதார வசதித் தடை, அத்தியாவசியப் பொருள்களுக்கான கட்டுப்பாடு ஆகிய நேரடி அழுத்தங்களால் பெரிதும்பாதிக்கபட்டு தமது ஜீவனோபாயத்துக்கே வழியற்று அங்கு துடிப்பவர்கள் எமது இரத்தங்கள்.

அவர்களுக்குத்தான் இப்போது அவசரமாக — அவசியமாக — நிவாரணம் தேவைப்படுகின்றது.

அவர்களைப் பட்டினிச் சாவில் துடிக்கவிட்டுவிட்டு, குடாநாட்டில் வாழும் எங்களுக்கு நிவாரண வெட்டைத் தளர்த்தி, நிவாரணத்தைத் தொடர்ந்து தரப்போகின்றதாம் அரசு!

ஒரு கண்ணில் வெண்ணெயையும் மறு கண்ணில் சுண்ணாம்பையும் தடவும் செயல் இது!

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் குடாநாட்டு மக்களுக்காக — குடாநாட்டிலிருந்து தெரிவு செய்யப்பட்ட எம்.பிக்களூடாக — செலவிடுவதற்கு ஒதுக்கப்பட்ட 4 கோடி ரூபா நிதியில் பல மில்லியன் ரூபாக்கள் எமது எம் பிக்களால் குருநாகல், புத்தளம், அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் செலவிடுவதற்கு பகிரப்படுகின்றன. ஆனால் குடாநாட்டைச் சேர்ந்த அகதிகள் செறிந்திருக்கும் — இராணுவக் கட்டுப்பாடற்ற — வன்னிப் பிரதேசத்துக்கு ஒரு சதத்தையேனும் வழங்குவதற்கு ஏற்பாடு இல்லை.

எமது நாடாளுமன்றப் பிரதிநிதிகளே வன்னியில் உள்ள எமது மக்களை (யாழ். குடாநாட்டு அகதிகளைப்) புறக்கணிக்கும் போது, சிங்கள அரசு ஏன் அவர்களைப் புறக்கணித்து பிரித்தாள முயற்சிக்காது?

குடாநாட்டு மக்களுக்கு அரசு காட்ட முயலும் சலுகையைக் கண்டு எமது அரசியல் தலைமைகள் குழம்பி விடக்கூடாது. நிவாரண வெட்டு விவகாரத்தில் தாம் முன்னெடுத்த போராட்ட முனைப்புகளை, வன்னியில் உள்ள எமது மக்களுக்கு நியாயமான வகையில் — நியாயமான அளவில் — நிவாரணம் வழங்கப்படும் வரை தொடர வேண்டும்.

# வல்லிபுராழ்வார் கோயில் உற்சவ ஏற்பாடுகள்

## ஆராய்வதற்குக் கூட்டம்

வடமராட்சி, ஓக. 26

சரித்திரப் பிரசித்திபெற்ற வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில் வருடாந்த மஹோற்சவத்துக்கான போக்குவரத்து, சுகாதார, தொண்டர் சேவைகள் குறித்து ஆராய்வதற்கான கூட்டம் இன்று புதன்கிழமை பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறைப் பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் கோயில் தர்ம கர்த்தா சபையினர், வட. பிராந்திய போக்குவரத்துச் சபை, சுகாதாரத் திணைக்களம், தொண்டர் நிறுவனங்கள் ஆகியவற்றின் அதிகாரிகளும், உத்தியோகத்தர்களும், வடமராட்சி சிற்றூர்திச் சேவைச் சங்கத்தினரும் கலந்து கொள்வார்கள்.

வல்லிபுரக் கோயில் வருடாந்த மஹோற்சவம் அடுத்த மாதம் 20 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. (இ-173)

## றோட்டரக்ட் கழகங்கள்

# ஆக்கபூர்வ பண்புகளை வளர்க்க வேண்டும்

## தலைவர் வலியுறுத்து

வலிகாமம், தெற்கு ஓக. 26

பதினெட்டு வயது முதல் முப்பது வயது வரையான இளம் தலைமுறையினரிடையே தலைமைத்துவப் பண்பு, நிர்வாகத்திறன், செயலாற்றல், ஆளுமை போன்ற பண்புகளை வளர்க்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டதே றோட்டரக்ட் கழகங்கள்.

சுன்னாகம் றோட்டரக்ட் கழகத்தினரால் வெளியிடப்பட்ட ''சுருதி'' மலரை வெளியிட்டு வைத்து உரையாற்றியயாழ். றோட்டரக்ட் கழகத்தலைவர் அ. பஞ்சலிங்கம் இவ்வாறு கூறினார்.

சுன்னாகம் றோட்டரக்ட் கழகத்தின் சுருதி மலர் வெளியீடும் 4ஆவது பதவியேற்பு வைபவமும் வி.ப. சசிவர்ணன்தலைமையில் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றன.

இந்த வைபவத்தில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது:-

இளைஞர்கள் மத்தியில் மேற்குறிப்பிட்ட பண்புகளை வளர்க்க றோட்டரக்ட் கழகங்கள் திட்டமிட்டுச் செயலாற்ற வேண்டும். குடாநாட்டிலுள்ள நான்கு றோட்டரக்ட்கழகங்களில் சுன்னாகம் றோட்டரக்ட் கழகம் ஒன்றுதான் இன்று சிறப்பாகச் செயற்பட்டு வருகிறது. இது பாராட்டிற்குரியதாகும்.

ஒரு கழகம் சிறப்பாக இயங்க வேண்டுமென்றால் அதற்கு தலைமை வகிப்பவரின் செயற்பாடுகள் திறமையாக அமைய வேண்டும். இன்றைய கஷ்டமான சூழ்நிலையிலும் கூட வெகு சிறப்பான ஒரு நூல் வெளியிடப்படுவது தலைமைத்துவ சிறப்பை எடுத்துக் காட்டுகிறது.

இப்படி அவர் கூறினார்.

'சுருதி' மலரின் முதற் பிரதியை சுன்னாகம் ப. நோ. கூ. சங்கம் சார்பாக எஸ். குமாரசாமி பெற்றுக் கொண்டார்.

றோட்டரக்ட் கழகம் நடத்திய போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான சான்றிதழ்களை சுன்னாகம் இலங்கை வங்கி முகாமையாளர், எஸ். விக்கினராசா வழங்கினார்.

கழகத்தின் 4ஆவது ஆண்டுக்கான தலைவரான எஸ். கனேந்திராவுக்கு தலைவர் சின்னத்தை அ. பஞ்சலிங்கம் சூட்டினார். (இ-5-152)

## கல்பறித்து 3 மாதம்

# காரைநகர் சுற்றுவீதி இன்னும் திருத்தவில்லை

யாழ்ப்பாணம் ஓக. 26

காரைநகர் சுற்று வீதி திருத்தம் செய்வதற்கென கல் பறிக்கப்பட்டு மூன்று மாதங்களாகியும் இதுவரையும் அந்த வீதி திருத்தம் செய்யப்படவில்லை என்று முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

காரைநகர் வலந்தனைச் சந்தியிலிருந்து வியாவில் வரையுள்ள இவ்வீதியை திருத்தம் செய்வதற்கு கேள்வி கோரப்பட்டு ஒப்பந்தகாரரிடம் ஒப்படைக்கப்பட்டு நீண்ட காலமாகியும் திருத்தம் செய்யப்படாமையினால்இப்பகுதி மக்கள் விசனமடைந்துள்ளனர்.

மழைகாலத்துக்கு முன்னர் இந்த வீதியை திருத்தம் செய்து தருமாறு காரைநகர் வியாவில் கிராம அபிவிருத்திச் சங்கம் வீதி அபிவிருத்தி அதிகாரசபையைக் கோரியுள்ளது.

இதேவேளை இந்த வீதி திருத்தம் செய்யப்படாமல் குண்டும் குழியுமாக இருப்பதால் இப்பகுதியில் சேவையில் ஈடுபடும் வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ்களின் பாகங்கள் தினமும் உடைந்து வருவதாகவும் இதனை திருத்தம் செய்ய உதவுமாறும் வடபிராந்திய போக்குவரத்துச்சபை முகாமையாளர் எஸ். சொக்கலிங்கம் காரைநகர் கடற்படை முகாம்பொறுப்பதிகாரியைக் கேட்டுள்ளார். (இ-5)

### நாளை

ஆவணி - 11

வியாழக்கிழமை

திதி: பஞ்சமி

பிற்பகல் 03 30 வரை.

நட்சத்திரம்: சித்திரை

முற்பகல் 9.27 வரை.

ரிஷி பஞ்சமி

சுபநேரம்: 07.35 - 09.05

ராகுகாலம்: 01.35 03.05

(பகலுக்கும் இரவுக்கும் பழையநேரப்படி)

### உதயவாக்கு

துன்பத்தை நன்கு பொறுக்கக் கூடியவனாலேயே எதனையும் நன்கு இயற்ற முடியும்.

— ஜான் மில்டன்.

# ஜனாதிபதியை சந்திப்பதற்கு குழு

## பிரதேசசபையில் பிரேரணை

யாழ்ப்பாணம், ஓக. 26

பிரதேச அபிவிருத்திக்கு வடக்கு—கிழக்கு மாகாண சபையால் ஒதுக்கப்படும் நிதி பற்றாக்குறையாக இருப்பதால் பிரதேசத்தின் அபிவிருத்தி குறித்து பேசுவதற்கு ஜனாதிபதியையும், மத்திய அமைச்சர்களையும், சந்திப்பதற்கு வலி. மேற்குபிரதேசசபை செயலாளர், அங்கத்தவர்கள் அடங்கிய குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டுமென வலி. மேற்கு பிரதேச சபை கூட்டத்தில்பிரேரணை ஒன்று கொண்டுவரப்பட உள்ளது.

மேற்படி சபை உறுப்பினர் செல்லப்பா பத்மநாதன் இதுதொடர்பான பிரேரணை கொண்டு வருவதற்கு முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

அவர் முன்னறிவித்தல் கொடுத்துள்ள பிரேரணைகள் வருமாறு—

★ த. வி. கூ. தலைவர் அ. அமிர்தலிங்கம், முன்னாள் வட்டுக்கோட்டை நாடாளுமன்ற உறுப்பினர் த. திருநாவுக்கரசு, ரெலோ தலைவர் சிறீ சபாரத்தினம், முன்னாள் யாழ். மாவட்டசபை அங்கத்தவர்களான காலஞ்சென்ற ச. பூபாலசிங்கம், எஸ். நடேசு ஆகியோரின் பெயர்களை புனரமைக்கப்பட்ட வீதிகளுக்குச் சூட்ட வேண்டும்.

★ பிரதேசசபை அதிகாரத்திற்கு உட்பட்டு நிரப்பப்படாமலிருக்கும் அனைத்து வெற்றிடங்களையும் உடனடியாக நிரப்புதல்வேண்டும்.

★ இராணுவ அதிகாரிகளுடன் உடனடியாகத் தொடர்பு கொண்டு மீன்பிடிப்போருக்கு அவர்களின் தொழில் அபிவிருத்திக்காக கால இட விஸ்தரிப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும். (இ-5)

# சமய சந்நிதிகளில்

கொழும்புத்துறை, ஓக 26

ஏழாலை அருள்மிகு சிவபூதவராய சுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று புதன விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை வழிபாட்டுடன் முடிவடைகிறது.

சங்காபிஷேக முடிவில் பிற்பகல் 1-00 மணிக்கு ''சமயமும் - தெய்வீக வழிபாடும்'' என்ற தலைப்பில் வ. குமாரசாமி ஐயர் அவர்களின் சமயச் சொற்பொழிவு இடம் பெறும். (இ-30)

★ ★ ★

சுன்னாகம் தெற்கு அருள்மிகு சிவபூதவராயர் ஆலய சங்காபிஷேகம் இன்று புதன் காலை 8மணிக்கு நடைபெறவுள்ளது. தொடர்ந்து மகேஸ்வர பூசை இடம்பெறும். மாலை 4-30மணிக்கு திருவூஞ்சலும் சுவாமி விசேட வீதியுலா வருதலும் இடம் பெறும். (இ-27)

★ ★ ★

சரித்திரப் பிரசித்தி பெற்ற பொன்னாலை அருள்மிகு ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயத்தின் வருடாந்த ஆவணித் திருவிழா நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 - 45 மணிககு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 18 தினங்கள் நடைபெறும்.

தேர்த்திருவிழா அடுத்த மாதம் 12 ஆம் திகதியும், 13 ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவும் மறு நாள் 1008 சங்காபிஷேகமும், மாலை 3-00 மணிக்கு திருக்கல்யாணமும் இடம்பெறும். (இ-30)

★ ★ ★

வடமராட்சி கரணவாய் நவிண்டில் குளவியடி அருள்மிகு ஸ்ரீ அம்பாள் ஆலய வருடாந்த உற்சவ தேர்த்திருவிழா இன்று புதன்கிழமை காலை 9-00 மணிக்கும் மறுநாள் காலை திர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (இ-30)

★ ★ ★

யாழ். ஆஸ்பத்திரி வீதி புனித அடைக்கல அன்னை ஆலய வருடாந்த திருவிழா இம் மாதம் 30-ந் திகதிகொடியேற்றத்துடன் ஆரம்பமாகி செப்ரெம்பர் மாதம் 8 ஆம் திகதி முடிவுறவுள்ளது.

இதற்கான ஆயத்தங்களை பங்குத் தந்தையும், பங்கு மக்களும் செய்து வருகின்றனர். (இ-30)

★ ★ ★

சாவகச்சேரி டச்சு வீதி அருள்மிகு செருக்கல்பதி ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

தேர்த் திருவிழா 5 ஆம் திகதியும் தீர்த்தத்திருவிழா 6 ஆம் திகதியும் நடைபெறவுள்ளன. மகோற்சவக்கிரியைகள் ஆலய பிரதம குரு சிவஸ்ரீகு. ஜெகதீஸ்வரக்குருக்கள் தலைமையில் நடைபெறும். (இ-31)

★ ★ ★

இருபாலை - கேணிக்குளம் பதி அருள்மிகு ஸ்ரீ லிங்கப் பிள்ளையார் ஆலயத்தின் (பழம் பிள்ளையார்) வருடாந்த உற்சவம் கடந்த 18 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தேர்த்திருவிழா இன்று புதன்கிழமை காலை 8 - 30 மணிக்கும், மறுநாள் காலை 9-30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (இ-30)

★ ★ ★

காரைநகர் மணற்காடு அருள்மிகு ஸ்ரீ கும்பநாயகி முத்துமாரி அம்பாள் ஆலயத்தின் பாலஸ்தாபன கிரியா நிகழ்வுகள் இன்று புதன்கிழமை காலை 6.00மணிக்கு ஆரம்பமாகும்.

கர்மாரம்பம், விநாயகர் வழிபாடு, அனுக்ஞை, கணபதி ஹோமம், நவக்கிரகமகம் ஆகியன இடம்பெறும்.

பிற்பகல் 2-00 மணிக்கு வாஸ்து சாந்தி மற்றும் கிரியைகள் இடம்பெறும்.

நாளை வியாழக்கிழமை காலை 7-00மணிக்கு கிரியைகள் ஆரம்பிக்கப்பட்டுபாலஸ்தாபன கும்பாபிஷேகம், மகா அபிஷேகம், குருமார் ஆசியுரை ஆகியன நடைபெறும். (இ-30)

★ ★ ★

வியாபாரிமூலை இன்பர்சிட்டி அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9-00 மணிக்கு கொடியேற்றத்துடன்ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறும்.

சப்பறத் திருவிழா எதிர்வரும் 4 ஆம் திகதியும், இரதோற்சவம் 5 ஆம் திகதியும், மறு நாள் பூரணை தினம் தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (இ-30)

★ ★ ★

அச்சுவேலி பத்தைமேனி அருள்மிகுஸ்ரீ விநாயகப் பெருமான் ஆலயத்தில் இன்று புதன்கிழமை காலை புனருத்தாரண மகாகும்பாபிஷேகம் நடைபெறும். (இ-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மடுமாதா ஆலயம்சென்றோர் திரும்பிவர தடை ஏதுமில்லை

## மன்னார் ஆயர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஓக. 26

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து மடுமாதா ஆலயத் திருவிழாவுக்குச் சென்ற எவரும் அங்கிருந்து வெளியேறுவதற்கு எவராலும் தடுக்கப்படவில்லை என மன்னார் மறைமாவட்ட ஆயர் வந். யோசப் இராயப்பு உதயனுக்குத் தெரிவித்தார்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்து சுமார் 5 ஆயிரம் பேர் வரை மடுமாதா உற்சவத்தில் கலந்து கொள்வதற்காகச் சென்றிருந்தனர் எனவும்— அவர்களில் அநேகமானோர் கடந்த 15 ஆம் திகதி மீண்டும் தமது பகுதிகளுக்கு திரும்பி விட்டனர் எனவும்— ஏனையோர் மறுநாள் திரும்பி விட்டனர் எனவும்— அவர் தெரிவித்தார்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து வேறு அலுவல்கள் காரணமாகச் சென்ற சிலரே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என தாம் அறிவதாகவும், அவர்கள் கூட நேற்று முதல் பயணத்தைத் தொடர அனுமதிக்கப்பட்டனர் என தாம் அறிவதாகவும் அவர் கூறினார். (இ-9-21)

## உலர் உணவு

உரும்பிராய், ஓக. 26

நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் மீளக் குடியமர்ந்தோருக்கான 64 ஏபி, 65 ஏபி ஆகிய முத்திரைகளுக்குரிய உலர்உணவுப் பொருள்கள் விநியோகிக்கப்படுகின்றன. (இ-154)

## பொம்மைவெளியில் கசிப்பு கண்டுபிடிப்பு

யாழ். பொம்மை வெளிப் பகுதியில் 210 லீற்றர் கசிப்பு கண்டுபிடிக்கப்பட்டது.

மேற்படி பகுதியிலுள்ள பழைய வீடொன்றில் கசிப்பு காய்ச்சப்படுவதாக கிடைத்த தகவலைத் தொடர்ந்தே கசிப்பு கண்டுபிடிக்கப்பட்டது.

பொம்மை வெளிப்பகுதியைச் சேர்ந்த கிராம சேவையாளர் செல்வி செ. தி. சகுந்தலாதேவியினால் கூழாவடிப் பகுதி இராணுவத்தினரின் உதவியுடன் கண்டு பிடிக்கப்பட்ட கசிப்பு அனைத்தும் அந்த இடத்திலேயே நிலத்தில் ஊற்றி அழிக்கப்பட்டது.

கசிப்பு காய்ச்சுவதில் சம்பந்தப்பட்டவருக்கு தகுந்த தண்டனையும் படையினரால் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-4)

## வடமராட்சியிலும் இராணுவம் போல் நடித்துக் கொள்ளை!

யாழ்ப்பாணம், ஓக. 26

வடமராட்சியில்பொலிகண்டி, சமரபாகுப்பகுதிகளில் இராணுவம் போல் நடித்து திருடர்கள் வீடுகளுக்குள் புகுந்து வீட்டுக்காரர்களை அடித்துத் தாக்கியதுடன், பெறுமதி மிக்க தங்க நகைகளையும் திருடிச் சென்றுள்ளனர்.

சம்பவம் பற்றி தெரிய வருவதாவது:-

நள்ளிரவு 12.45 மணிக்கு சமரபாகுப் பகுதியில் ஒரே நேரத்தில் இரு வீடுகளுக்குள் நுழைந்த திருடர்கள் வீட்டை சோதனை செய்ய வந்திருப்பதாகக் கூறி வீட்டில் இருந்தோரை எழுப்பினர். வீட்டுக்காரர்கள் திருடர்களை எதிர்க்க முற்பட்ட போது திருடர்கள் அவர்களைத் தாக்கிவிட்டு நகைகளை அபகரித்துச் சென்றனர்.

இச் சம்பவத்தில் ஒரு வீட்டில் ஐந்து 2 பவுண் தங்கச் சங்கிலியும், 10 ஆயிரத்து 500 ரூபா ரொக்கப் பணமும் திருடப்பட்டுள்ளன.

இதேவேளை கொற்றாவத்தைப் பகுதியிலும் ஒரு வீட்டுக்குள் நுழைந்து சோதனை செய்யப் போவதாகக் கூறி உள்ளே சென்ற போது வீட்டுக்காரர்கள் கூச்சலிடவே திருடர்கள் தப்பிச் சென்று விட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-15)

## நால்வர் பிடிபட்டனர்

ஆனைக்கோட்டைப் பகுதியில் அடுத்தடுத்து இடம் பெற்ற திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக பொது மக்களால் சந்தேகத்தின் பேரில் நால்வர் பிடிக்கப்பட்டு யாழ்ப்பாணம் பொலீசாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்த நால்வர் மீதும் விசாரணைகளை மேற்கொண்ட பொலீசார் இவர்களுக்கும் ஏனைய பல திருட்டுச் சம்பவங்களுக்கும் தொடர்புகள் இருப்பதாகத் தெரிவித்தனர்.

யாழ். நகர பொலீஸ் பொறுப்பதிகாரி மோகனதாஸ் தலைமையிலான பொலீஸார் தொடர்ந்து இவர்கள் மீது விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (இ-173)

## காயம்

அச்சுவேலியில் நேற்று முன்தினமிரவு இடம்பெற்ற ஓட்டோ விபத்தில் ஒருவர் காயமடைந்தார்.

ஓட்டோ சாரதியான ஆனைக்கோட்டையைச் சேர்ந்த பஞ்சலிங்கம் விஜயரூபன் (வயது19) என்ற இளைஞனே காயமடைந்தவராவார். இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-15)

## சாரணீயத்தில் சேர்வதில் மாணவர் ஆர்வம் குறைவு

### கல்வி அதிகாரி கவலை

சாவகச்சேரி, ஓக. 26

ஒவ்வொரு பாடசாலையிலும் சாரணர் அமைப்பை மிகச் சிறந்தமுறையில் உருவாக்க வேண்டும். தற்போது பாடசாலைகளில் சாரண ஆசிரியர்கள் சாரணீயத்தை உருவாக்கப் பாடுபடுகிறார்கள். ஆனால் மாணவர்களது பங்குபற்றல் குறைவாக உள்ளது.

அண்மையில் கைதடி நவீல்ட் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற கிளிநொச்சி மாவட்ட சாரணர் கிளைச் சங்க தென்மராட்சி-பளைப்பிரிவு சாரணர்களுக்கான ஒன்றுகூடல் நிகழ்வில் தலைமையுரை நிகழ்த்திய தென்மராட்சிக் கல்விக் கோட்டப் பிரதிக் கல்விக் பணிப்பாளர் இ. கணேசன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில், கல்விக் கோட்டம் சாரணர்களது வளர்ச்சிக்கு சகல விதத்திலும் உதவத் தயாராக உள்ளது. எனவே பாடசாலைகளில் மாணவர்களை சாரணீயத்தில் இணைக்க ஆசிரியர்கள் உந்துசக்தியாக இருக்க வேண்டும். சில பாடசாலைகளில் சாரணீயம் வளர்ச்சியடையவில்லை.

மாணவர்களை சாரணீயத்துக்குள் சேர்க்கும்போது அம் மாணவர்களிடம் ஆளுமை வளர்ச்சி, தலைமைத்துவம், சமூகத்தில் பழகும் பண்பு என்பன வளர்ச்சி காண்கின்றன. இவை சாரணீயமூலம் உருவாகின்றது.

அது போன்று ஆசிரியர்களும் பரந்த மனப்பான்மையாலும், சிறந்த தலைமைத்துவ பாங்கினாலும் இவற்றை வளர்க்க வேண்டும். இவை தற்போது எமது ஆசிரியர்கள். மாணவர்களுக்கு இயலுமான அளவு சென்றடையவில்லை.

இத்திட்டத்தை பாடசாலைகள் மட்டத்தில் விரிவுபடுத்தும் நோக்கில் அதிபர்களை அழைத்து கருத்துரை வழங்க திட்டமிட்டுள்ளோம். இச்சாரணீய செயற்பாடுகளும் கல்விச் செயற்பாடுகளில் ஓர் அங்கமாகும்.

இப்படி அவர் கூறினார்.

இந் நிகழ்வில் தென் இலங்கையில் இடம்பெற்ற ஐந்தாவது ஜம்போறியில் கலந்துகொண்ட மாணவ சாரணீயர்களுக்கும், ஆசிரிய சாரணீயர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. சாரணீயத்தில் பயிற்சி பெற்று முதுமையடைந்து தொண்டுகள் பல புரிந்தவர்களும் கௌரவிக்கப்பட்டார்கள்.

இந்த நிகழ்வில் நீண்ட காலமாகச் சேவையாற்றி வரும் ஆசிரியர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

சாரணீய மாவட்ட ஆணையாளர் மா. புவனேந்திரன், திருமதி சேவியர், எஸ். தருமலிங்கம், எஸ். கதிரித்தம்பி, ஆ. பொ. செல்லையா, டாக்டர் சி. அருணானந்தம் ஆகியோர் கருத்துரை வழங்கினர். அதிபர் செ. சுப்பிரமணியம் நன்றியுரை நிகழ்த்தினார்.

சாரணீய மாணவர்கள், ஆசிரியர்கள் கைதடி நவீல்ட் பாடசாலை வளவில் மூன்று நாள்கள் சாரணீய [illegible] கள் தலைமையில் [illegible] அமைத்து பயிற்சியில் ஈடுபட்டனர். (இ-31)

## கைதடியில் சாராய வடிசாலை

யாழ்ப்பாணம், ஓக. 26

கைதடியில் 40 லட்சம் ரூபா செலவில் சாராய வடிசாலை ஒன்று தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க கொத்தணியால் நிறுவப்படவுள்ளது.

கைதடியில் ஏற்கனவே அரச வடிசாலைகள் கூட்டுத்தாபனத்தால் நிறுவப்பட்ட சாராய வடிசாலைக் கட்டடம் முற்றாகச் சேதமாக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

அரச வடிசாலைகள் கூட்டுத்தாபனக் காணியிலேயே புதிய சாராய வடிசாலை நிறுவப்படவுள்ளதாக தென்மராட்சி ப. தெ. வ. அ. கூ. சங்க தலைவர் [illegible] சிங்கம் தெரிவித்தார். (இ-5)

## வெள்ளைப்பூரான் கடித்து இளம் பெண் மரணம்!

### வடமராட்சியில்

வடமராட்சிப் பகுதியில் இளம் பெண் ஒருவர் வெள்ளைப்பூரான் தீண்டி உயிரிழந்தார்.

அல்வாய் தெற்கில் நேற்று இடம் பெற்ற இச்சம்பவத்தில் நாகேந்திரம் நிசாலினி (வயது 17) என்ற இளம்பெண் மரணமானார்.

நேற்று அதிகாலை சிறுநீர் கழிக்கச் சென்று விட்டு படுக்கைக்கு திரும்பிய சமயம் வீட்டுக்குள் வைத்து வெள்ளைப் பூரானால் கடியுண்ட இவர் அதிகாலை 2 மணிக்கு மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்ட இவர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக உடனடியாகவே யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

யாழ். ஆஸ்பத்திரியில் அவசர சிகிச்சைக்குட்படுத்தப்பட்ட அவர் சிகிச்சை பயனளிக்காது நேற்று அங்கு மரணமானார். (ஐ-15)

## வாசகர் திருமுகம்

### கூட்டுறவுச் சங்க ஊழியர் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படுமா?

யாழ். மாவட்டத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் ஊழியர்களின் சம்பளம் அரச ஊழியர்கள் பெறும் சம்பளத்திலும் மிகக் குறைவாக உள்ளது. புதிதாக வந்த சம்பளத் திட்டம் ஒரு கண் துடைப்பாக உள்ளது. புதிதாகச் சேரும் ஊழியர்களுக்கு ஓரளவு சம்பள உயர்வு கிடைக்கிறது என்றாலும், பல வருடம் சேவை செய்யும் ஊழியர்களுக்கு இந்தப் புதிய சம்பளத்திட்டம் ஒரு வித பலனையும் தருவதாக இல்லை.

இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேலிடத்துக்குச் சிபார்சு செய்து சம்பள அதிகரிப்பை பெற்றுத் தர முயற்சிக்கக் கூடாதா? அரச ஊழியர்களும், கூட்டுறவுச் சங்க ஊழியர்களும் ஒரே விலையில் தானே பொருள்களை வாங்குகிறார்கள். இதனால் சம்பளம் குறைவாகப் பெறும் கூட்டுறவுச்சங்க ஊழியர்களின் வாழ்க்கைத்தரம் பாதிக்கப்படுகிறது. இதை அதிகாரிகள் விரும்புகிறார்களா?

அண்மையில் அரசாங்க ஊழியர்களுக்கு 40 சத வீத சம்பள உயர்வு வழங்கப்படும் பொழுது, கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கு இந்த 40 சத வீத சம்பள உயர்வு கிடைக்க வழி செய்யக் கூடாதா?

1997, 1998 ஆம் ஆண்டுக்கான இடர் காலப்படி $1\frac{1}{2}$ சத வீதம் அரசாங்க ஊழியர்களுக்குக் கிடைக்கும் பொழுது ஏன் கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கு இது கிடைக்க வழி செய்யக் கூடாதா?

கூட்டுறவுச் சங்கங்களில் பயிற்சியாளர்களாகச் சேர்ந்த பயிற்சியாளர்களுக்கு நாளொன்றுக்கு சில சங்கங்கள் ரூபா 75-ம், சில சங்கங்கள் ரூபா 60-ம் வழங்கி வருகின்றன என அறியக் கூடியதாக உள்ளது. ஏன் இந்த வேறுபாட்டை நிவர்த்தி செய்யக் கூடாதா?

இத்தகைய பயிற்சியாளர்களை நிரந்தர ஊழியர்களாக ஆக்க கூட்டுறவுச் சங்க நிர்வாகங்கள் முயற்சிக்கக் கூடாதா?

1987 தொடக்கம் 1998 வரை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டுவரும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கு நிவாரண உதவிகள் வழங்க முன்வரும்போது கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கு நிவாரண உதவிகளை வழங்க முன்வராதது ஏன்? கூட்டுறவுச் சங்க ஊழியர்களை இரண்டாந்தரப் பிரஜைகளாகக் கருதக் கூடாது.

ஆகவே கூட்டுறவுச் சங்க ஊழியர்களின் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சண்டிலிப்பாய். — வி. எஸ். இராசதுரை

### நாவலர் வீதி திருத்தப்படுமா?

யாழ். நகரில் தற்பொழுது நாவலர் வீதி மிகவும் போக்குவரத்து அதிகரித்த வீதியாகக் காணப்படுகின்றது. பருத்தித்துறை, பலாலி ஆகியவற்றிற்கு செல்லும் பேருந்துகளோ, மினிபஸ்களோ யாழ். நகர மத்தியிலிருந்து புறப்பட்டு நாவலர் வீதி வழியாகப்பயணித்தே பருத்தித்துறை வீதிக்கும் பலாலி வீதிக்கும் திரும்புகின்றன. ஆனால் அவ்வீதியின் அவல நிலையை சொல்லி மாளாது. ஒரே குண்டும் குழியுமாக காணப்படுகின்றது.

குறிப்பாக கஸ்தூரியார்வீதி-பிறவுண் வீதிச் சந்திகளுக்கு இடையில் காணப்படும் நாவலர் வீதியின் மோசமான நிலையினால் தினமும் மக்கள் பள்ளங்களில் விழுந்து எழும்பிச் செல்கின்றனர். இதைவிட அவ்விடத்தில் அமைந்துள்ள ஒரு மாடிவீட்டுச் சொந்தக்காரர் தனது படிக்கட்டை றோட்டுக்கு குறுக்காக கூடியதூரம் நீட்டமாக கட்டிவைத்துள்ளார். ஒரு புறம் மதகு. மறுபுறம் படிக்கட்டு குறுகலான பாதை வழியாக மக்கள் தட்டுத்தடுமாறி பயணஞ் செய்கின்றனர். மக்கள் பாவனை மிகக் குறைந்த சிறு குறுக்கு வீதிகள் கூட தார் போடப்பட்டு செப்பனிடப்பட்ட போதும் இவ்வாறானதொரு முக்கிய வீதி மாநகர சபையின் கண்களுக்கு புலப்படவில்லையா?

எத்தனையோ தடவைகள் இவ் வீதியின் அவல நிலை பற்றி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது. ஆனால் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாக தெரியவில்லை. மாரிகாலம் ஆரம்பமாகியுள்ள இக் காலகட்டத்திலாவது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூடிய விரைவில் நடவடிக்கை எடுத்து இவ் வீதியைச் செப்பனிட்டு மக்கள் போக்குவரத்திற்கு உதவுவார்கள் என நம்புகின்றோம். எமது நம்பிக்கை வீண்போகுமா?

சி. முகுந்தன்

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐம்பது லட்சம் ரூபா செலவில்

# அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் ஏற்பாட்டில் மேலும் 14 திட்டங்கள்

யாழ்ப்பாணம், ஓக. 26

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் யாழ். மாவட்டத்தில் மேலும் 14 அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கு அங்கீகாரம் அளித்துள்ளது.

ஏற்கனவே 62 திட்டங்களை இங்கு ஐ. நா. அகதிகள் தூதரகம் நடைமுறைப் படுத்தியுள்ளது குறிப்பிடத் தக்கது. புதிய திட்டங்களுடன் சேர்த்து தற்பொழுது மொத்தம் 76 திட்டங்களை ஐ. நா. அகதிகள் தூதரகம் குடாநாட்டில் செயற்படுத்தும்.

செயற்படுத்தப்படவுள்ள புதிய திட்டங்களின் விவரம் வருமாறு:-

★ பருத்தித்துறை, ஊர்காவற்றுறை பகுதிகளில் பொதுக் கிணறுகள் திருத்துதல்,

★ கேசடை, களபூமி (காரைநகர்) வீதி திருத்தம்,

★ நெடுந்தீவு இறங்கு துறை, வள்ளம் போன்றவை திருத்தல்,

★ நயினாதீவு இறங்கு துறை புனரமைப்பு, பயணிகள் தங்குமடம் அமைத்தல்,

★ வரணி தாவளை — இயற்றாளையில் பெண்களுக்கென சுயதொழில் கடன் திட்டம்,

★ உடுவில், ஏழாலை, சுன்னாகம் பகுதிகளில் சலவைத் தொழிலாளர்களுக்கான உதவித்திட்டம்,

★ புலோலி, நீர்வேலி பகுதிகளிலுள்ள விவசாய உரக்களஞ்சியம் புனரமைப்பு

★ யாழ்ப்பாணம் மரவேலைப் பயிற்சிப் பாடசாலை புனரமைப்பு,

★ யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளரூடாக கோப்பாய், நல்லூர், சண்டிலிப்பாய் பிரதேச செயலர்கள் பிரிவிலுள்ள பெண்களுக்கான தலைமைத்துவ பயிற்சி வழங்கல்,

இத்திட்டங்களுக்கு 50 லட்சம் ரூபா வரை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் யாழ். செயலகத்தின் அனுசரணையுடன் இத் திட்டங்களை நடைமுறைப் படுத்தவுள்ளது. (உ-5)

## பிரிட்டன் தூதரின் மன்னார் விஜயம் திடீர் ரத்து!

இலங்கைக்கான பிரிட்டன் தூதர் டேவிட் தத்தத்தின் மன்னாருக்கான விஜயம் திடீரென கைவிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் இவர் மன்னார் நிலைமைகளைப் பார்வையிடுவதற்காக அங்கு செல்லவிருந்தார். (உ-6)


## வட இலங்கைச்சங்கீத சபை பரீட்சைகள் - 1999

வட-இலங்கைச் சங்கீத சபையின் 1999 ஆம் ஆண்டுப் பரீட்சைகளுக்கான விண்ணப்பப் படிவங்கள் 1998-09-01 முதல் விற்பனைக்கு வரும். விண்ணப்பப்படிவம் ஒன்றின் விலை அறிவுறுத்தல் பிரதியுடன் ரூபா 20-00.

விண்ணப்பப் படிவத்தைத் தபால் மூலம் பெற விரும்பும் தேர்வு நாடிகள் ரூபா 20-00 பெறுமதியான அஞ்சற் கட்டளை (Money Order) உடன் ரூபா 2-50 பெறுமதியான தபாற்தலை ஒட்டிய சொந்த முகவரி எழுதப் பட்ட நீள் (10 செ. மீ X 22 செ. மீ) கடித உறையை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

தேர்வு நாடி ஒருவர் ஒரு படிவத்தில் ஒரு பாடத்திற்கு மட்டுமே விண்ணப்பிக்கலாம், ஒன்றுக்கு மேற்பட்ட பாடங்களுக்கு விண்ணப்பிப்பவர்கள் ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனி விண்ணப்பம் அனுப்பக் கடமைப்பட்டுள்ளார்கள்.

ஒன்றுக்கு மேற்பட்ட பாடத்திற்கோ ஒன்றுக்கு மேற்பட்ட தரத்துக்கோ ஒரே படிவத்தில் விண்ணப்பித்தால் அத்தகைய விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

அஞ்சற் கட்டளைகள் வட-இலங்கைச் சங்கீத சபை என்ற பெயரில் பெறப்பட்டு யாழ்ப்பாணம் (JAFFNA) தபால் நிலையத்தில் மாற்றக்கூடியதாக அமைதல் வேண்டும்.

பின்வரும் இடங்களிலும் விண்ணப்பப் படிவங்கள் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

1. வட-இலங்கைச் சங்கீத சபை
   கல்வித்திணைக்களம்,
   செம்மணி வீதி, யாழ்ப்பாணம்.

2 வி. எம். குகானந்தா விவேகானந்தா ம. வி.
  புதுச்செட்டித் தெரு,
  கொழும்பு.

3 க. தவமணிதாசன்
  கவிதா ஸ்ரோர்ஸ்,
  இல. 51 பஸ் நிலையம்,
  வவுனியா.

4 என். கே. சதாசிவம்
  பிரதிகல்விப்பணிப்பாளர்,
  கண்டாவளைக் கல்விக்
  கோட்டம், கண்டாவளை.

திரு நா. சுந்தரலிங்கம்
கல்விப்பணிப்பாளர் (வலயம் 1)
தலைவர் வட-இலங்கைச் சங்கீத சபை

(சி/4661)


# பெண்களைக் கண்டால் துரத்தி இடிக்கும் மாடு

தென்மராட்சி, ஓக. 26

வீதியில் நடந்து சென்ற மூதாட்டியை எதிர்த் திசையில் ஓடிவந்த பசு மாடு ஒன்று கொம்பினால் இடித்து காயப்படுத்திய சம்பவம் நேற்று முன்தினம் மிருசுவில் வடக்கில் இடம்பெற்றது.

திருமண வீடொன்றுக்கு போவதற்காக ஒழுங்கையில் வந்து கொண்டிருந்த மூதாட்டியை வளவில் மேய்ந்து கொண்டிருந்த பசுமாடு ஓடிவந்து கொம்பினால் தாக்கியதாகவும் —

இதனால் மூதாட்டிக்கு கையில் பலத்த காயம் ஏற்பட்டதாகவும்—தெரிவிக்கப்பட்டது.

இதே இடத்தைச் சேர்ந்த குமாரசாமி முத்துப் பிள்ளை (வயது 60) என்னும் மூதாட்டியே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

சம்பந்தப்பட்ட மாடு பெண்களைக் கண்டால் துரத்தி இடிப்பதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (உ-117)

# குண்டுப் புரளியால் நேற்று நுகேகொடயில் பதற்றம்

கொழும்பு, ஓக. 26

கொழும்பு நுகேகொட தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்தில் குண்டு வைக்கப்பட்டுள்ளதாகப் பரப்பப்பட்ட புரளி காரணமாக நுகேகொட பிரதேசம்நேற்று நண்பகல் அல்லோல கல்லோலப்பட்டது

பொலீஸ் நிலையத்திற்கு அநாமதேய தொலைபேசி மூலம் இந்த தகவல் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து முற்பகல் 11.30 முதல் பிற்பகல் 2.30 வரை ஹைலெவல் வீதி வாகன போக்குவரத்துக்கு மூடப்பட்டு பரிவர்த்தனை நிலைய ஊழியர்களும் வெளியேற்றப்பட்டனர்.

சோதனையிடப்பட்ட பின்பு தான் அது புரளிஎனத் தெரியவந்தது.

குண்டுப் புரளியால் ஏற்பட்ட பதற்றம் காரணமாக அப்பகுதிக் கடைகள் யாவும் மூடப்பட்டு பின்னர் பிற்பகலில் தான் திறக்கப்பட்டன. [உ-21]

## நீதிமன்றத்தில் மனுத் தாக்கல்

கொழும்பு, ஓக. 26

'பிரின்ஸஸ் காஷ்' கப்பல் தகர்க்கப்பட்ட சம்பவத்தை அடுத்து கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள இரண்டு பேரின் சார்பில் அவர்களை விடுவிக்கக் கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமைகள் மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

எஸ். வி. முருகேசு அன் கம்பனி நிறுவனப் பணிப்பாளர் முருகேசு சதானந்தன், முகாமையாளர் வைத்திலிங்கம் ரஞ்சித் ஆகியோர் சார்பிலேயே மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. (உ-21)


விற்பனைக்கு

புறொஜெக்ரர்
Projector 300''
Sanyo
Model – PLC – 220 P
தொடர்பு:
ரட்ணம்ஸ் மாட்டா
49, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(58660)

BOSCO
A/L 2000
Eco. Mr. விக்கி B.A.
நிரம்பல் கோட்பாடு

A/L 99 / 2000
Logic Mr. பத்மராஜ்
அனுமானம்
ஆரம்பம்:
28 - 08 - 98
Mon Fri.
3-00 — 4-00
(58664)

BOSCO
INSTITUTE
25, றக்கா வீதி, யாழ்.
Spoken English
by:
BRITTO
ஆரம்பம்: 02 - 09 - 98
Mon, Wed 4-30 (Old Time)

அடிப்படைச் சிங்களம்
by:
தர்சினி
ஆரம்பம்: 29 - 08 - 98
Sat., Sun, 4-00 — 5-00
(58664)

தேவை

தாதியாக
வேலை செய்ய
பெண் பிள்ளைகள்
தேவை.
அண்மையில் உள்ளவர்கள்
விரும்பத்தக்கது.

நடனமுருகன்
வைத்திய நிலையம்
சத்திர சந்தி,
யாழ்ப்பாணம்.
(58654)

பொருளியல்
S.வரதராஜன்
A\L 99
சனி - ஞாயிறு
10 - 11 வினா - விடை
12 - 1 வரவு செலவு
திட்டம்
2 - 3 பணமும்
வங்கியும்
A/L 2000
புதிய பிரிவு 11-00 மணி
ஆரம்பம்: 29 - 08 - 98
பொருளியல்
கல்லூரி
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்
(58655)

கோழிக் குஞ்சு

ஒரு நாள் புறோயிலர் குஞ்சு நாளை காலை விநியோகிக்கப்படும். பதிவு செய்தவர்களும், தேவையானோரும் உடன் பெற்றுக் கொள்ளவும்.

தொடர்பு:
லக்கி பாம் ஹவுஸ்
மதவடி ஒழுங்கை,
திருநெல்வேலி.
(58662)

உ

திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான வெகுதானிய வருடம் ஆவணி மாதம் 11 ஆம் நாள் (27-08-98) வியாழக்கிழமை முற்பகல் 10-00மணி முதல் 11-15மணி வரை வரும் சுவாதி நட்சத்திரமும் பஞ்சமி திதியும் சித்தாமிர்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

எமது சிரேஷ்ட புத்திரன்
திருநிறைசெல்வன்
சிறீதரன்
M B Bs. (Cey)
அவர்களுக்கும்



எமது கனிஷ்ட புத்திரி
திருநிறைசெல்வி
தயானந்தி
B. A. (Hons) (Cey)
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு மணமகள் இல்லத்தில் திருமணஞ்செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் சுற்றஞ்சூழ வருகை தந்து மணமக்களை ஆசிர்வதித்து, தொடர்ந்து நடைபெறும் விருந்து உபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

திரு. திருமதி அப்புத்துரை,
றோஸ்பிறான்ட் முன் ஒழுங்கை,
உடுவில் வீதி, மானிப்பாய்.

திரு. திருமதி கதிரவேலு,
[illegible]
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

(58658)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஜனாதிபதியைச் சந்திக்க

# மணிக்கூட்டுக்கோபுரத்தில் சிப்பாய் உண்ணாவிரதம்

கொழும்பு, ஒக; 26

ஜனாதிபதியைச் சந்திப்பதற்கு தமக்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டும் என்று கோரி முன்னாள் இராணுவச் சிப்பாய் ஒருவர் நேற்று அம்பாறை மணிக்கூட்டுக் கோபுரத்தின் மேல் ஏறி அங்கிருந்தபடி உண்ணாவிரதம் ஒன்றை ஆரம்பித்துள்ளார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான எம். சாலகூரிய என்ற இந்தச் சிப்பாய் ஏற்கனவே மீரிகமப் பகுதியில் பணியாற்றிய சமயமும் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நடத்தியதாகக் கூறப்பட்டது.

சுமார் 10 வருடங்கள் இராணுவத்தில் பணியாற்றிய பின்னர் 1995 ஆம் ஆண்டில் இராணுவத்தைவிட்டு விலகிய இந்த இராணுவச் சிப்பாய் கடை ஒன்றை திறப்பதற்காக அம்பாறை நகரில் தமக்கொரு காணி வழங்கப்பட வேண்டுமெனக் கோருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-6-21)

### குறுந்தூர ஓட்ட வீராங்கனை

# சுஸந்திகா மீண்டும் சர்வதேசப் போட்டிகளில்!

கொழும்பு, ஒக. 26

இலங்கையின் பிரபலகுறுந்தூர ஓட்ட வீராங்கனை சுஸந்திகா ஜெயசிங்க, மலேசியாவில் நடைபெற இருக்கும் பொதுநலவாய நாடுகள் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளார்.

போதைவஸ்து பாவித்த குற்றச்சாட்டின் பேரில் இவர் சர்வதேச போட்டிகளில் கலந்து கொள்வதற்கு தடை விதிக்கப்பட்டிருந்தது.

எனினும் இது பற்றி விசாரித்த மூவர் கொண்ட குழுவின் இரு அதிகாரிகள் சுஸந்திகா குற்றமற்றவர் என்று தெரிவித்ததையடுத்து இவர் சர்வதேச போட்டிகளில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தற்போது சுஸந்திகா சகல உள்ளூர் மற்றும் சர்வதேசப் போட்டிகளிலும் கலந்து கொள்ள முடியும் என்று ஸ்ரீலங்கா அமெச்சூர் மெய்வன்மைச் சங்கத் தலைவர் சூரியகன்னங்கர தெரிவித்தார்.

இதேவேளை சுஸந்திகா போதைப் பொருள்களைப் பாவித்தார் என்ற குற்றச்சாட்டிலிருந்து விடுபட்டபோதும் இப்பிரச்சினை இன்னும் முடிந்து விடவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (உ- 6)

### காயமுற்ற...

(முதலாம் பக்கத் தொடர்)

னத்தை இராணுவம்திரும்பப் பெற்று விட்ட தென்றும்—

சில வருடங்களுக்கு முன்னர் இராணுவ உயர் அதிகாரிகளுக்கு எதிராகத் தான் தெரிவித்த கருத்துக்களைக் காரணமாக வைத்தே தாம் இப்போது பழிவாங்கப்படுவதாகவும்—

பழிவாங்கும் நோக்குடன் தமக்கு எதிராக இராணுவ விசாரணை ஒன்று நடத்தப் படுகின்றது என்றும்—

அவர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார். (உ-6)

## விடைத்தாள் மதிப்பீட்டு அலுவலருக்கு!

ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையின் இரண்டாவது தொகுதி விடைத்தாள் மதிப்பீட்டாளர்களும் மேலதிக பிரதம மதிப்பீட்டாளர்களும் தமது பிரயாண ஒழுங்குகள் தொடர்பாக வலயம் ஒன்றின் கல்விப் பணிமனையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

# யாழ். மக்கள் அச்சம் ஏதுமின்றி பொலிஸாரின் சேவையைப் பெறலாம்

### தலைமையக இன்ஸ்பெக்டர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக.26

யாழ். பொலிஸ் நிலையத்தில் பொதுமக்கள் தமது அலுவல்களைத் தமிழில் மேற்கொள்வதற்குச் சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

யாழ். பொலிஸ் நிலையத் தலைமையக இன்ஸ்பெக்டர் கே. மோகன்தாஸ் நேற்று உதயனுக்கு இத்தகவலைத் தெரிவித்தார்.

யாழ். பொதுமக்கள் அச்சம் ஏதுமின்றித் தங்களுக்குரிய உரிமையுடன் பொலிஸ் நிலையத்துக்கு வந்து தங்கள் பிரச்சினைகளை சுயாதீனமாகத் தீர்த்துச் செல்வதற்கு சகல வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

பொதுமக்கள் பயப்படாமல் -தரகர்களின் துணையை நாடாமல் — நேரடியாக யாழ். பொலிஸ் நிலையத்துக்கு வந்து பொலிஸ் அதிகாரிகளைச் சந்தித்து தமது பிணக்குகள், சர்ச்சைகள், கஷ்டங்கள் போன்றவற்றுக்கு பொலீஸ் உதவியை உரிய சட்டமுறையில் பெற்றுக் கொள்ளமுடியும்.

பொலீஸ் நிலையத்தை அந்நியமாகப் பார்க்காமல் மக்கள் உரிமையுடன் அணுக வேண்டும் என்பதற்காகச் சகல ஏற்பாடுகளையும் செய்துள்ளோம்.

வடபகுதி மக்கள் பொலீஸ் நிலையத்துக்கு வந்து— மொழிப் பிரச்சினை ஏதுமின்றி — மனநிறைவோடு தமது தேவைகளைப் பூர்த்தி செய்து செல்வதற்குரியவசதிகள் அனைத்தையும் செய்யும்படி வடபகுதிக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலீஸ் மா அதிபர் எமக்குப் பணித்துள்ளார். அதற்கு ஏற்றவாறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மக்களோடு தொடர்பு கொள்ள வேண்டிய இடங்களில்தமிழ்மொழி தெரிந்த பொலீஸாரைச் சேவையிலீடுபடுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

யாழ். பொலீஸ் நிலையத்தில் பக்கச் சார்பற்ற—நியாயமான— தீர்வு தங்களுக்குக் கிட்டவில்லை என்று பொதுமக்கள் யாரேனும் கருதினால் என்னை நேரில் சந்தித்து முறைப்பாடு செய்யலாம். உரிய முறையில் அவர்களது முறைப்பாடு கவனிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும். — இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

### கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்)

னர்.

கப்டன் கே. எஸ். விக்கிரமரட்ன என்ற இந்த அதிகாரி வன்னி இராணுவ நடவடிக்கைக்குப் பொறுப்பான மேஜர் ஜெனரல் நீல டயஸின் தனிப்பட்ட உதவியாளர் எனக் கூறப்படுகின்றது.

சிவில் உடை தரித்து — 'இராணுவம்' என எழுதப்பட்ட வாகனத்தில் — வந்து கொண்டிருந்த போதே அவர் சுடப்பட்டார்.

முகத்திலும் நெஞ்சிலும் அவர் படுகாயமடைந்தார்.

சைக்கிளில் வந்த இரு இளைஞர்களே துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும்—

அவர்களில் ஒருவர் மாலை 6.30 மணியளவில் கிருளப்பனையில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார் எனவும்—

அவரிடம் மைக்ரோ கிரனேட் ஒன்று மீட்கப்பட்டுள்ளதாகவும் —

தகவல் ஒன்று தெரிவித்தது.

அதேசமயம் ஒட்டோ ஒன்றில் வந்த விடுதலைப் புலிகளின் பிஸ்டல் குழுவினரே அவரை சுட்ட பின்னர் தப்பிச் சென்றுள்ளனர் எனத் தனியார் செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்தது.

விடுதலைப் புலிகளே இத்தாக்குதலை நடத்தியதாக அரசுத் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக சிங்களவர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக கொழும்புப் பத்திரிகை வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-9-6-3-21)

# ஆசிரிய ஆலோசகர் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஒக. 26

யாழ். கல்வி வலயம் 1 ஐச் சேர்ந்த அனைத்து ஆசிரிய ஆலோசகர்களையும் நாளை வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு வலயக் கல்விப் பணிமனையில் தவறாது சமுகமளிக்குமாறு வலயம் 1 இன் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ)

### அபிவிருத்தி...

(முதலாம் பக்கத் தொடர்)

டங்கள் முன்னுரிமை அளிக்கப்படக் கூடியவை அல்ல என சபை கருதியதனால் அதனை நிராகரித்தது.

மேலும் 1997 ஆம் ஆண்டு இலியாஸின் சிபார்சின் பேரிலேயே யாழ். மாவட்ட அபிவிருத்தி சபையால் ஒதுக்கப்பட்ட நிதி பயன்படுத்தப்பட்டது. இதுதொடர்பாக புத்தளத்திலுள்ள முஸ்லீம்கள் எனக்குநேரிலும், எழுத்துமூலமும் பல முறைப்பாடுகளைத் தெரிவித்துள்ளனர். ' இதன் காரணமாகவே இம்முறை சபையில் அவரது திட்டங்கள் நிராகரிக்கப்பட்டன.

இதனால்சபையில் இருந்து வெளியேறிய இலியாஸும், ஆர். இராமேஸ்வரன், ஆர். இராமமூர்த்தி ஆகியோரும் விரும்பத்தகாத சொற்களை பிரயோகித்தனர். அவர்கள் பிரேரணை எதனையும் சமர்ப்பிக்காமலே வெளியேறினர்.

சபை தொடர்ந்தும் கூடி 400 லட்சம் ரூபாவை பல அபிவிருத்தி திட்டங்களுக்கு ஒதுக்கியுள்ளது. —என்று டக்ளஸ் மேலும் தெரிவித்துள்ளார். (உ-9)

### தாக்குதல்...

(முதலாம் பக்கத் தொடர்)

என்பவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கரையோரத்தில் மீனவர்களின் படகுகள் ஒழுங்கு முறையில் கட்டப்படாத காரணத்துக்காகவே அருகில் இருந்த முகாமில் இருந்து வந்தவர்கள் கடற்றொழிலாளரைக் கட்டைகளாலும் சப்பாத்துக்களினாலும் அடித்துத் தாக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

### செம்மணியில்...

(முதலாம் பக்கத் தொடர்)

வற்புறுத்தினர் அதனை வாசித்த பின்னர் அதில் கையெழுத்திட நான் மறுத்து விட்டேன்.

இவ் வேளையில் எனது கையில் இருந்த மற்றொரு கடிதத்தைப் பறிப்பதற்கு அவர்கள்முயன்றனர் ஆனால் நான் அதனை வாயில் போட்டு விட்டேன். எனவே அதை என்னிடமிருந்து பறிப்பதற்காக அவர்கள் என்னைத் தாக்க ஆரம்பித்தனர் — என்றார். (உ-6)

### இலியாஸ்...

(முதலாம் பக்கத் தொடர்)

வழங்கப்பட வேண்டும் என்வும்—

இலியாஸ் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார் என அந்தத் தொலைக் காட்சி மேலும் குறிப்பிட்டது. (உ-10-9)

### மனித...

(முதலாம் பக்கத் தொடர்)

வும் —

இது குறித்து விரைவில் அறிக்கைஒன்றை வெளியிடும் மன்னிப்புச் சபை, அந்த அறிக்கையில் சோமரத்ன ராஜபக்ஷவின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும்படி அரசை வற்புறுத்தும் எனவும் —

விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-3)

### யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்)

கத்தக்க விதத்தில் உயர் கல்வியமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை வழங்குவதாக ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

நேற்று முன்தினம் தங்களது தூதுக்குழு ஜனாதிபதியைச் சந்தித்த போது அவர் இவ்வாறு உறுதியளித்ததாக ஈ. பி. டி. பி. தெரிவித்தது.

திருமலையில் அத்து மீறிய குடியேற்றங்கள், சிங்க நகரில் தமிழர்களின் குடியிருப்பில் இருந்து அவர்களை வெளியேற்ற எடுக்கும் முயற்சிகள் ஆகியவை ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. இது தொடர்பாகவும் உரிய நடவடிக்கை எடுக்கத் தாம் உத்தரவிட்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

— இவ்வாறு ஈ. பி. டி. பி. மேலும் தெரிவித்துள்ளது. (உ-9)


## JAFFNA TECHNICAL INSTITUTE

JAFFNA, SRI LANKA

Reg. No, 15251

## தொழிற் பயிற்சிகள்

- RADIO, T. V. AND VIDEO DECK REPAIRING (காலம் 9 மாதங்கள்)
- MOTOR REWINDING AND ELECTRICAL WIRING (காலம் 6 மாதங்கள்)
- MOTOR MECHANISM (காலம் 5 மாதங்கள்)
- AIR CONDITION AND REFRIGERATION (காலம் 6 மாதங்கள்)

**புதிய பயிற்சிகள் ஆரம்பம்**

02 - 09 - 1998 (கிழமை நாள்களில்)

05 - 09 - 1998 (சனி, ஞாயிறு நாள்களில்)

Note: எமது நிறுவனத்தில் மீண்டும் மிக விரைவில் கணனி பயிற்சி நெறிகள் ஆரம்பமாகவுள்ளன.

மேலதிக விவரங்களுக்கு நேரில்:

52/1, ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம்.

(ரயில்வே கடவை அருகில்)

- DIRECTOR

எமது கிளை நிறுவனங்களில் கீழ்க் குறிப்பிட்ட வேலைகள் நடைபெறுகின்றன.

- சகல Radio, T. V. and Video Deck திருத்திக் கொடுக்கப்படும்,
- V. H. F., U. H. F. Antenna பொருத்திக் கொடுக்கப்படும்.
- மின் மோட்டர், Fan, Transformer றிவைண்டிங் செய்து கொடுக்கப்படும்.
- சகல குளிர்சாதனப் பெட்டிகளுக்கும் gas ஏற்றிக் கொடுக்கப்படும்.

கிளை நிறுவனங்கள்:

இல. 15/9, யாழ். வீதி, யாழ்ப்பாணம்.

இல.72, மானிப்பாய்வீதி, ஒஸ்கா வீதி அருகில் (வைத்தீஸ்வரா சந்தி) [illegible] வீதி, யாழ்ப்பாணம். [illegible]

(58646)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26-08-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org